ஆம்,
இயேசு
உங்களை
விசாரிக்கிறார்!



டாக்டர் உட்ரோ குரோல்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆம், இயேசு உங்களை விசாரிக்கிறார்!

Dr.உட்ரோ குரோல்

சத்தியவசனம்

9, வெங்கட்ராமன் தெரு, சின்ன சொக்கிகுளம்

மதுரை – 625 002, Ph.0452-2532316

email: svmadurai @yahoo.co.in; info@sathiyavasanam.in
website: www.sathiyavasanam.in

HO: The Goodnews Broadcasting Society,

#30-220 Telecom Colony, Kanajiguda,

Secunderabad - 15, PH.040-27796353

© The Good News Broadcasting Society - Back To The Bible

Title : Yes, He cares
தலைப்பு : ஆம், இயேசு உங்களை விசாரிக்கிறார்

Author : Dr. Woodrow Kroll
எழுதியவர் : டாக்டர் உட்ரோ குரோல்

மொழியாக்கம்: G.வில்சன்
Translation : G. Wilson

First Edition : June 2013, 5000 Copies.
முதற்பதிப்பு : ஜுன் 2013, 5000 பிரதிகள்.

Cover designed by Artist Sunderarajan, Visual Dots, Chennai

முன்னுரை

அன்புடையீர்,

டாக்டர் உட்ரோ குரோல் அவர்கள் "Yes, He cares" என்ற தலைப்பில் எழுதிய புத்தகத்தை மொழிபெயர்த்து வழங்குவதில் பெருமிதம் அடைகிறோம்.

"வேதாகமத்திற்குத் திரும்புக" ஆங்கில வானொலி நிகழ்ச்சியில் இச்செய்தியை டாக்டர் உட்ரோ குரோல் அவர்கள் வழங்கியபோதும் பின்பு புத்தகமாக தொகுத்து வெளியிட்டபோதும் அநேகர் பிரயோஜனமடைந்தனர். இச்செய்திகளின் சில பகுதிகளைத் தமிழில் மொழியாக்கம் செய்து சத்தியவசன சஞ்சிகையில் பிரசுரித்தபோதும் அநேகர் தேற்றப்பட்டனர்.

இயேசுகிறிஸ்துவின் மனதுருக்கத்தின் மேன்மையை மிகவும் விரிவாக டாக்டர் உட்ரோ குரோல் அவர்கள் இப்புத்தகத்தில் விளக்கிக் காட்டியுள்ளார். நாம் பாரங்கள் சுமந்து தவிக்கும்போதும், மீளா துயரத்தில் மூழ்கும்போதும், தோல்வியினால் துவளும்போதும், துக்கத்தின் மிகுதியில் கண்ணீர் வடிக்கும்போதும் நம்மை ஆற்றித் தேற்றி விசாரிப்பதற்கு மனதுருக்கமுள்ள இயேசு ஒருவர் நமக்கு இருக்கிறார் என்பதை இப்புத்தகத்தின் ஆசிரியர் மிகவும் அழுத்தமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கிறார். டாக்டர் உட்ரோ குரோல் அவர்கள் எழுதிய புத்தகங்களில் இப்புத்தகமும் ஓர் சிறந்த புத்தகமாகும்.

இப்புத்தகத்தை வேத வல்லுநரும் மொழிபெயர்ப்பாளருமான G.வில்சன் அவர்கள் திறம்பட மொழிபெயர்த்துள்ளார்கள். அவர்களுக்கு எமது நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

இப்புத்தகம் நிச்சயமாக நம்பிக்கையை இழந்து வாழ்கிற அநேகரைத் தேற்றுவதாக இருக்கும் என நம்புகிறோம். இப்புத்தகத்தின் செய்தி இன்னும் அநேகருக்கு செல்லவேண்டும் என்பது எங்களது மிகுந்த ஆவல்!

"ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதி செய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்" (ஏசா.30:18).

கே.ப.ஆபிரகாம்
மேலாளர், சத்தியவசனம்

பொருளடக்கம்

எண்	அத்தியாயம்	பக்கம்
01.	இயேசுவின் மனதுருக்கம் நிறைந்த இருதயம் ...	01
02.	நான் பாரங்கள் சுமந்து தவிக்கும்போது இயேசு என்னை விசாரிக்கிறவராயிருக்கிறாரா? ...	13
03.	நான் துயரமடையும்போது இயேசு என்னை விசாரிக்கிறவராயிருக்கிறாரா? ...	27
04.	நான் வீழ்ச்சியடையும்போது இயேசு என்மேல் கரிசனையுள்ளவராயிருக்கிறாரா? ...	41
05.	நான் துக்கப்படும்போது இயேசு என்னை விசாரிக்கிறவராயிருக்கிறாரா? ...	53
06.	முடிவுரை ...	65

அத்தியாயம் - 1

இயேசுவின் மனதுருக்கம் நிறைந்த இருதயம்

நீங்கள் எப்பொழுதுதாவது கைவிடப்பட்டதாக உணர்ந்திருக் கிறீர்களா? கஷ்டங்கள், போராட்டங்கள், சோதனைகள் ஆகியவற்றில் நீங்கள் சிக்கித் தவிக்கும்போது தனியாக விடப்பட்டதாக நினைத்தி ருக்கிறீர்களா? உங்களில் பலர் அவ்வாறு நினைத்திருப்பீர்கள்.

1901இல் போதகர் ஃபிராங்க் கிராயப் இத்தகைய ஒரு சூழ்நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தார். அவர் தனது இருதயம் நொறுங்கி போகும் அளவுக்கு வேதனையான அனுபவங்களைப் பெற்றிருந்தார். அவருடைய நிலை, **"தோல்வியும், துன்பமும் நிறைந்ததாய்"** இருந்தது. ஒவ்வொரு நாளும் அவர் நழுவி நழுவி ஆழமான துக்கத்திலும் துன்பத் திலும் விழுந்துகொண்டிருப்பது போல் உணர்ந்தார். இறுதியில் ஃபிராங்க் கிராயப் முழங்காலில் நின்று தன் இருதயத்தின் பாரங்களை யெல்லாம் ஆண்டவர் பாதத்தில் இறக்கிவைத்தார். அப்பொழுது ஆண்டவர் அவருக்கு 1பேதுரு 5:7ஆம் வசனத்தை நினைவுபடுத்தினார்:

"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளை யெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்".

சோர்ந்துபோயிருந்த அந்தப் போதகர் இந்த வசனத்தைப் பற்றி தியானித்த போது, தேவன் தன்னிடத்தில் கரிசனையோடு இருப்பதை உறுதி செய்தார். ஃபிராங்க் இதை உணர்ந்தவுடன் தன் ஆத்து மாவிற்குள் அளவற்ற ஒரு சந்தோஷம் வந்து நிறைவதை உணர்ந்தார். அந்த மகிழ்ச்சியில் கீழ்க்கண்ட பாடலை எழுதினார்:

"என் இருதயம் மிகுந்த வேதனையில் தவிக்கும்போது ;
இயேசு என்னை விசாரிக்கிறவராயிருக்கிறாரா ?
பாரங்கள் என்னை அழுத்தும்போதும்,
கவலைகள் துன்பத்தைத் தரும்போதும்,
என் வழிகள் களைப்பும் நீண்டதுமாய் இருண்டு அந்தகாரப்பட்டு
பயமும், திகிலும் என்னைப் பிடிக்கும்போதும்,

இயேசு என்மேல் கரிசனையுள்ளவராயிருக்கிறாரா ?
பகல் வெளிச்சம் மங்கி இரவாய் மாறி,
என்னைப் பயப்படுத்தும்போது - என் நேசர்
துணையாய் என்னருகில் நிற்கின்றாரா ?
சில பலமான சோதனைகளை நான்
எதிர்த்துப் போராடி ஜெபிக்கத் தவறிடும்போது - என்
இயேசு எனக்காகக் கவலைப்படுகிறாரா ?

ஆழ்ந்த வேதனையில் சிக்கி, விடுதலையே இல்லாமல்,
இரவு முழுவதும் நான் கண்ணீர் வடிக்கும்போதும் - உலக ஆசைகள்
அனைத்துக்கும் வேண்டாமென்று நான் விடைகொடுத்த போதும்
எனது சோகமான இருதயம் வேதனையுற்று,
நொறுங்கும் நிலையை அடையும் பரிதாபத்தை அவர் பார்க்கிறாரா ?"

இந்த கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் உற்சாகமடைந்த போதகர் இவ்வாறு பதில் கூறுகிறார்: **"ஓ! ஆம், அவர் என்னை விசாரிக்கிறார்; அவர் என்னிடத்தில் கரிசனையுள்ளவராயிருக்கிறார் என்பதை நான் அறிவேன். என்னுடைய வேதனை அவருடைய உள்ளத்தைத் தொட்டுவிட்டது. நாட்கள் சோர்வையும் களைப் பையும் தரும்போதும் இரவுகள் வேதனையில் நீண்ட இரவுகளாய் மாறும்போதும் என்னுடைய இரட்சகர் எனக்காகப் பரிதபிக்கிறார் என்பதை நான் அறிவேன்".**

போதகர் கிராயெப் கண்டுபிடித்ததுபோல இயேசுவின் சாரம்சம், **"ஒரு மனதுருக்கமுள்ள இருதயமே"**. இயேசு உங்களை நேசிக்கிறார். அவர் உண்மையாகவே உங்களை நேசிக்கிறார். அவரிடம் ஒரு அற்புதமான மனதுருக்கமுள்ள இருதயம் இருக்கிறது.

உண்மையான **மனதுருக்கம்** என்றால் என்ன? நீங்கள் வாழ்க்கைப் பிரச்சனைகளில் சிக்கித் தவித்து தனியாக விடப்பட்டதாக உணரும் போது இயேசுவின் **மனதுருக்கம்** உங்களுக்கு என்ன செய்யும்?

இரக்கத்தைக் காட்டிலும் மனதுருக்கம் உயர்ந்தது

நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்கள் மேல் நாம் **இரக்கங்காட்டுவது** என்பது ஒன்று. ஆனால் **உண்மையான மனதுருக்கம்** என்பது அதைவிட மேலானது. இரக்கங்காட்டுவது தவறல்ல. அது ஒரு சிறந்த உணர்ச்சியாகும். துரதிர்ஷ்டவசமான துன்பச்சூழ்நிலைகளில் நாம் மற்றவர்களிடம் இரக்கம் காட்டுகிறோம். ஆனால் நாம் அவர்கள்மேல் மனதுருக்கம் கொள்வதில்லை. மற்றவர்கள் மீது இரக்கங்காட்டிய பலரைப் பற்றிய சம்பவங்கள் வேதாகமத்தில் உண்டு.

யாத்திராகமம் 2ஆம் அதிகாரத்தில் சிறு குழந்தையாகிய மோசேயுடைய கூடையில் வைக்கப்பட்டு நதியில் மிதக்கவிடப்படுவதைக் காண்கிறோம். பார்வோனின் குமாரத்தி அதிகாலையில் ஆற்றில் குளிக்க வந்தாள். அவள் நாணற்புதரின் மத்தியில் அந்தப் பெட்டி மிதப்பதைக் கண்டாள். தன் தோழிகளில் ஒருத்தியிடம் அதைக் காட்டி அதை எடுத்துவரச் செய்தாள். "அதைத் திறந்தபோது பிள்ளையைக் கண்டாள். பிள்ளை அழுதது; அவள் அதன்மேல் இரக்கமுற்று இது எபிரேயர் பிள்ளைகளில் ஒன்று என்றாள்" என்று யாத்.2:6 கூறுகிறது. இங்கு "**இரக்கம்**" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் சொல் எபிரேய மொழியின் சமால் (CHAMAL) என்ற சொல்லாகும். இதன் பொருள் "**இரக்கங்காட்டுதல்**" அல்லது "**இரக்கங்கொள்ளுதல்**" என்பதாகும். இதே சொல் 1சாமுவேல் 23ஆம் அதிகாரத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சந்தர்ப்பத்தில் சவுல் தாவீதைத் துரத்திச் செல்லும்போது, சீப் ஊரார் சவுலிடம் தாவீது ஒளிந்திருக்கிற இடம் தங்களுக்குத் தெரியும் என்றார்கள். அப்பொழுது சவுல் அவர்களிடம், "நீங்கள் என்மேல் தயை வைத்ததினாலே, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்களாக"(வச.21) என்றான். இது சீப் ஊர் மக்களுக்குச் சவுலின்மேல் பிரியம் இருந்தது என்று காட்டவில்லை. அவர்களுக்கு அவன்மேல் இரக்கம்தான் ஏற்பட்டது. இங்குள்ள உணர்ச்சிக்கு "**இரக்கம்**" என்பது ஒரு பொருத்தமான வார்த்தை ஆகும். இரக்கத்தைவிட "**மனதுருக்கம்**" என்பது கடினமானது. இறையியலாளரான **ஹென்றி நௌவென்** இவ்வாறு கூறினார்:

"மனதுருக்கம்" கொள்வது என்பது எவ்வளவு கடினமானது என்பதை எவரும் குறைத்து மதிப்பிட வேண்டாம். மற்றவர்கள் மனம் உடைந்தவர்களாக, கைவிடப்பட்டவர்களாக, குற்றம்புரிந்தவர்களாக, பலவீனமானவர்களாக, எங்கே இருக்கிறார்களோ, அங்கே அவர்களோடு சேர்ந்துச் செல்ல, உள் மன உணர்ச்சி தேவை. அதுவே மனதுருக்கமாகும்.

இது துன்பப்படும் மற்றவர்கள் மீது நம்மில் தானாக ஏற்படும் உணர்ச்சி அல்ல. நம்மில் இயல்பாக உள்ள தன்மை என்னவெனில், துன்பங்களைக் கண்டால் தூர விலகியோடுவோம் அல்லது அதற்கு ஒரு விரைவான தீர்வைக் காண முயல்வோம். **நௌவன்** சொன்னது சரியே. மனதுருக்கம் கொள்ளுவது சுலபமல்ல. உங்கள் விருப்பமும், எனது விருப்பமும் தேவையில் இருக்கும் ஒரு மனிதனைப் பார்க்கும்போது

அவன்மீது இரக்கங்கொண்டு உடனே உதவி செய்வதாகும். அதேவேளையில் "**மனதுருக்கம்**" என்பது சுயநலமற்ற அன்பாகும். அது ஒருவர்மேல் காட்டப்பட்டால் அது நீடித்து நிலைக்கும்.

சீப் ஊராரைப்போலவும் அல்ல, பார்வோனின் குமாரத்தியைப் போலவும் அல்ல, சிலவேளைகளில் உங்களையும், என்னையும் போலவும் அல்ல, தேவன் நம்மிடம் இரக்கம்மாத்திரம் கொள்வதில்லை. அவருக்கு நம்மேல் இருப்பது "**மனதுருக்கம்**" ஆகும். சங்.78:38 ஆம் வசனம் புதிய சர்வதேசப் பதிப்பு வேதாகமத்தில் இவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது: "அவரோ அவர்களை அழிக்காமல், இரக்க முள்ளவராய் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்தார். அவர் தமது உக்கிரம் முழுவதையும் எழுப்பாமல் அநேகந்தரம் தமது கோபத்தை விலக்கி விட்டார்". இங்கே "**இரக்கமுள்ளவராய்**" என்று குறிப்பிடப்பட்ட வார்த்தையின் பொருள் "**ஆழமாய் நேசித்தல்**" என்பதாகும். அல்லது "**மென்மையான பாசம் கொள்ளுதல்**" என்பதாகும். தேவன் இஸ்ரவேலை அழிக்கமாட்டார். காரணம், அவருக்கு அவர்கள்மேல் **ஆழமான, மென்மையான பாசம்** இருந்தது. அவர்கள்மீது அவருக்கு மனதுருக்கம் இருந்தது. அவர் இரக்கம் நிறைந்தவர்; மட்டுமல்ல, அவர் மனதுருக்கமும் நிறைந்தவர். "ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்" (சங்.86:15).

இரக்கம் என்பது நீங்கள் ஒருவரைப் பார்த்து, அவரைக்குறித்து பரிதாப உணர்வு கொள்ளுகிறீர்கள். **மனதுருக்கம்** என்பது நீங்கள் அதே நபரைப் பார்க்கிறீர்கள். அவர் மேல் அன்பு செலுத்துகிறீர்கள்.

இரக்கம் வீடற்ற ஒரு மனிதனுக்கு ஒரு டாலர் பணத்தைக் கொடுக்கிறது. **மனதுருக்கம்** அவன் தங்குவதற்கு அடைக்கலமான ஒரு இடத்தைத் தேடிக் கொடுக்கிறது.

மனதுருக்கம் அர்ப்பணிப்பை அடிப்படையாகக் கொண்டது!

மனதுருக்கத்துடன் உணர்ச்சிகள் சேர்ந்து இருக்கலாம். ஆனால் அது உணர்ச்சிகளைவிட உயர்ந்தது. மனதுருக்கம் ஒரு அர்ப்பணம். நம்மிடம் இரக்க உணர்ச்சி அல்லது அன்பு உணர்ச்சி இருக்கலாம். உணர்ச்சி வரும், போகும். மக்கள் வருகிறார்கள், போகிறார்கள். அவர்களுடைய உணர்ச்சிகள் மாறுபடும். ஆனால் **உண்மையான மனதுருக்கமோ** தொடர்ந்து நிலைத்திருக்கும். நமது உணர்வுகளை

மீறியும் அது நிலைத்திருக்கும். ஏனெனில் அது நம்முடைய அர்ப்பணிப்பைச் சார்ந்திருக்கும்.

2 இரா.13:23இல் இஸ்ரவேலர் மீது தேவனுக்குள்ள மனநிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. "ஆனாலும் கர்த்தர் அவர்களுக்கு இரங்கி, ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடு செய்த தமது உடன்படிக்கையினிமித்தம், அவர்களை இன்னும் தம்முடைய முகத்தைவிட்டுத் தள்ளாமலும் அவர்கள்மேல் மனதுருகி, அவர்களை நினைத்தருளினார்". இந்த வசனம் தேவன் இஸ்ரவேலின்மேல் வெறும் இரக்கம்மட்டும் கொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது. தேவன் அவர்கள்மீது ஒரு **அர்ப்பணம்** கொண்டிருந்தார். இது ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியரோடு செய்துகொண்ட **உடன்படிக்கை சார்ந்த அர்ப்பணமாகும்.**

இதேமுறையில் தேவன் உங்களுக்கும் எனக்கும் மனதுருக்கம் காட்டுகிறார். புலம்.3:32 இல் "அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார்" என்று பார்க்கிறோம். தேவனுக்கு நம்மீது ஒரு அர்ப்பணம் இருக்கிறது. நமது நலன் மீது அவருக்கு அக்கறை உண்டு. நமது இரட்சிப்பின்மீது அவருக்கு அக்கறை உண்டு. நமது எதிர்காலத்தின் மீது அவருக்கு அக்கறை உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் தம் குமாரனையே நமக்காகத் தந்தார். நாம் எப்போதும் கண்டுகொள்ள முடியாத மாபெரும் அர்ப்பணம் அதுவே. தேவன் நம்மை விரும்புகிறார் என்பதால் மட்டும் நம்மீது மனதுருக்கம் கொள்ளவில்லை. அவர் நம்மீது அர்ப்பணம் கொண்டுள்ளபடியால் அவர் நம்மீது மனதுருக்கம் காட்டுகிறார்.

மனதுருக்கம் ஒருவரது குணாதிசயத்திலிருந்து வெளிப்படுகிறது !

இரக்கம் **உணர்ச்சிகளை** அடிப்படையாகக் கொண்டது. மனதுருக்கமோ **குணாதிசயத்தை** அடிப்படையாகக் கொண்டது.

ஒரு தெருவின் மூலையில் வீடற்ற ஒரு மனிதன் அட்டையில் எழுதிய ஒரு குறிப்பைக் கையில் பிடித்துக்கொண்டு நிற்கிறான். அதில் "உணவு தந்தால் அதற்காக வேலை செய்வேன்" என்று எழுதப்பட்டிருந்தது. அதைப் பார்க்கும்போது நீங்கள் உங்கள் உள்ளத்தில், "அதோ, அந்த ஏழை மனிதன், ஏதுமின்றித் தெருவில் நிற்கிறான். அவனுக்குச் சாப்பிட உணவில்லை. தங்குவதற்கு வீடில்லை. என்ன வெட்கம்!". என்று நினைப்பீர்கள். இவ்வாறு உங்கள் உணர்வுகள் சொல்கின்றன. பின்னர் நினைக்கிறீர்கள்; "நான் அவனுக்கு ஒரு டாலர் கொடுப்பேன்.

சிரித்துக்கொண்டே கொடுக்கும்போது அவன் சந்தோஷப்படுவான். எனக்கு அவன்மேல் அநுதாபம் ஏற்படும்." ஆனால் இது "**மனதுருக்கம்**" அல்ல. **உங்கள் கரிசனையிலிருந்து பிறப்பது மனதுருக்கமல்ல. அது உங்கள் குணாதிசயத்திலிருந்து பிறக்கவேண்டும்.** யாரோ ஒருவர் இப்படிக் கூறியிருக்கிறார்:

"மேதைகள் பாராட்டப்படுகிறார்கள். ஐசுவரியவான்களைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள். வல்லமையுள்ளவர்களைப் பார்த்துப் பயப்படு கிறார்கள். குணாதிசயம் உள்ளவர்கள் மட்டுமே நம்பப்படுகிறார்கள்"

தேவையிலிருக்கும் ஆணோ, பெண்ணோ, அவர்களைப் பார்த்து, நாம் வசதி உள்ளவர்களாய் இருப்பதால் அல்ல, குணாதிசயம் உள்ள ஆணாகவும், பெண்ணாகவும் இருப்பதால் மனதுருக்கம் கொண்டு உதவிசெய்கிறோம். இவ்வுலகில் குணாதிசயம் எல்லா மாறுதல்களை யும் செய்யும். **தேவனிடம் உள்ள நம்பகமான குணாதிசயமே அவருடைய மனுதுருக்கத்தை நமக்குக் கொண்டு வருகிறது.** சங்.145:8,9 வசனங்களில் இப்படிப் பார்க்கிறோம்: "**கர்த்தர் இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர். அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகள் மேலும் உள்ளது**".

B.F. வெஸ்ட் காட் என்னும் பெரிய வேதாகம அறிஞர் இப்படிக் கூறினார்: "**பெரிய சந்தர்ப்பங்கள் வீரர்களையோ, கோழைகளையோ உருவாக்கு வதில்லை; அவை மற்றவர்களுக்கு அவர்களைப்பற்றி வெளிப்படுத்துகின்றன**". அப்பொழுதுதான் மனிதர்கள் அவர்களை அறிந்துகொள்கிறார்கள். அமைதியாக, ஓசையின்றி, நாம் விழித்திருக்கிறோமோ, தூங்கு கிறோமோ, நாம் பலசாலிகளாகவோ, பலவீனமானவர்களாகவோ ஆகிவிடுகிறோம். கடைசியில் ஏதாவது ஒரு நெருக்கடி வரும்போது, நாம் எப்படி ஆகியிருக்கிறோம் என்று அறிந்துகொள்கிறோம். **ஒரு நெருக்கடி நம்முடைய உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகிறது. அது நமது குணாதிசயத்தையும் வெளிப்படுத்திவிடுகிறது.** இயேசு கூறிய நல்ல சமாரியன் உவமையில் நல்ல குணாதிசயத்தையும், மனதுருக்கத்தையும் காண்கிறோம் (லூக்.10:33-37).

இந்த உவமையின்படி ஒரு மனிதன் எருசலேமிலிருந்து எரிகோ வுக்குச் சென்றான். வழியில் திருடர்களின் கையில் அகப்பட்டான். அவர்கள் அவனிடமிருந்த அத்தனை பொருட்களையும் திருடிவிட்டு,

காயப்படுத்தி அவனை அப்படியேப் போட்டுவிட்டுப் போய்விட்டனர். இப்பொழுது அவன் குற்றுயிராய்க் கிடக்கிறான். அப்பொழுது அவ்வழியாக வந்த ஒரு ஆசாரியன் இவனைக் கண்டவுடன் வேறுபக்கமாக விலகிச் சென்றுவிட்டான். பின்னர் ஒரு லேவியன் அவ்வழியே வந்தான். இவனும் குற்றுயிராகக் கிடந்தவனைக் கண்டபின்னரும் உதவி ஏதும் செய்யாமல் போய்விட்டான். அப்புறம் ஒரு சமாரியன் அவ்வழியே வந்தான். அவன் காயப்பட்டவனைக் கண்டதும் அவன்மீது மனதுருக்கம் கொண்டான் (லூக்.10:30-33).

யூதர்கள் சமாரியர்களை வெறுத்தார்கள். ஏனெனில் இந்தச் சமாரியர்கள் கலப்பின மக்கள். கி.மு 721 இல் வடதேசம் பிடிக்கப்பட்டு மக்கள் நாடு கடத்தப்பட்டபோது மீதியாய் இருந்த யூதர்களுடன், தேசத்தை நிரப்ப வந்து குடியேறிய புறஜாதியாரும் கலப்பினமாய் திருமண உறவு கொண்டதால் பிறந்தவர்களே "**சமாரியர்கள்**" எனப்பட்டனர். எந்த யூதனும் இந்த கலப்பின மக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. ஆனால் இயேசு காட்டிய சமாரியன் நல்ல குணாதிசயம் உள்ளவன். அவனிடத்தில் கலாச்சார வேறுபாடுகள் இல்லை. ஆபத்தில் இருப்பவனுக்கு அவன் செய்யவேண்டிய உதவியைச் செய்யவிடாமல் தடுக்க, இன, கலாச்சார வேறுபாடுகளுக்கு அவன் இடங்கொடுக்கவில்லை. அவனிடம் காணப்பட்ட மனதுருக்கம் அவன் யார் என்பதில் தோன்றியதல்ல. எப்படிப்பட்டவன் என்பதில் தோன்றியது.

மனதுருக்கம் கிரியைச் செய்யத் தூண்டுகிறது

லூக்.10:33இல் "**மனதுருக்கம்**" என்பதற்குக் கிரேக்கமொழியில் கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தையானது, நீளமானதும், உச்சரிக்கக் கடினமானதுமான "**ஸ்பிளாக்ச்னிசோமாய்**" என்ற வார்த்தையாகும். இது மனந்திரும்பிய மைந்தன் உவமையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. லூக்.15:11-24இல் மனந்திரும்பிய மைந்தன் உவமையை இயேசு கூறுகிறார். இதில் ஒருமகன் தன் தகப்பனிடமிருந்து ஆஸ்தியைப் பெற்றுக்கொண்டு கட்டுப்பாடும் ஒழுக்கமும் அற்ற முறையில் அத்தனையையும் அழித்தான். அனைத்தையும் இழந்து தன் நிலை உணர்ந்த பின் அவன் தன் தகப்பனிடம் திரும்பி வந்தான். தகப்பன் தன் மகனை மனதுருக்கத்துடன் வரவேற்றதாக லூக்கா குறிப்பிடுகிறார். இங்கும் அதே கிரேக்கச் சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இரு உவமைகளிலும் மனதுருக்கம் கிரியைச்செய்யத் தூண்டியது என்று காண்கிறோம். நல்ல சமாரியனுக்கு அவனிடம் ஏற்பட்ட மனதுருக்கம், காயம்பட்ட யூதனுடைய காயங்களைக் கழுவி, மருந்திட்டுக் கட்டி, அவனது தாகத்தைத் தீர்த்து, தனது வாகனத்தில் ஏற்றி சத்திரத்தில் கொண்டு சேர்த்துப் பராமரித்து, அவனுக்காக ஆகும் கூடுதல் செலவையும் கொடுக்க முன்வந்ததில் முடிந்தது.

மனந்திரும்பிய மைந்தனின் அப்பாவினுடைய **மனதுருக்கம்**, அந்த மகனுக்கு விலையுயர்ந்த வஸ்திரங்களையும், பாதரட்சைகளையும், மோதிரங்களையும் தரிப்பித்து, காணாமற்போன மகன் திரும்பிவந்ததைக் கொண்டாட ஒரு சிறப்பான விருந்தை ஆயத்தப்படுத்தியதில் வெளிப்பட்டது.

மனதுருக்கம் என்பது ஒரு வெறும் வாய்ச் சிலம்பமல்ல. அது பயனுள்ள கிரியைகளுக்கு வழிநடத்தும். யாக்கோபு இதை இப்படிக் கூறுகிறார்: "**ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனம் என்ன?**"(யாக்.2:15,16). உதவி தேவைப்படும் யாரையாவது நாம் சந்திக்கும்போது, அவர்கள் நமது பக்கத்து வீட்டுக்காரராகவோ, ஆலயத்துக்கு வரும் சபையாரில் ஒருவராகவோ, இருந்தால் நாம் அவர்கள்மீது இரக்கம் காட்டியும், அவர்களுக்கு எந்த உதவியும் செய்யாவிட்டால் நம்மில் மனதுருக்கம் இல்லை.

நமதாண்டவரின் பண்பு மனதுருக்கம்

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசுவின் மனதுருக்கத்தை வெளிப்படுத்த விரும்பியபோது, அவர்கள் கிரேக்க மொழியில் உள்ள "**ஸ்பிளாக்ச்னிசோமாய்**" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். மத்தேயு இச்சொல்லைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தினார். மத். 9:36இல்,"அவர் **திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும், சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,...**"என்று வாசிக்கிறோம். ஆதரவற்ற, சிதறடிக்கப்பட்ட, துன்புறுத்தப்பட்ட யூத இனத்தைப் பின்பற்றிய மக்களுக்கு ஆவிக்குரிய வழிகாட்ட ஒருவரும் இல்லை.

இவர்களைக் கண்டதும் இயேசு மனதுருகினார். அடுத்த வசனம் கூறுவதென்ன? "**அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்**" **(வச.37)** என்றார். இந்த மக்கள்மீது மனதுருக்கம் கொள்வதுமட்டும் போதுமென்று இயேசு நினைக்கவில்லை. அவர் தமது சீஷர்களை அவர்கள் மத்தியில் சென்று ஊழியம் செய்யும்படிக்கு கட்டாயப்படுத்தினார். இந்த வயல்களில் அறுவடை செய்து மணிகளைத் தமது களஞ்சியத்தில் கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்றார்.

மேலும் மத்தேயு 14:14 இயேசுவின் மனதுருக்கத்தை நமக்குக் காட்டுகிறது. "**இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி ...** ". இங்கே 5000 பேர்களுக்கு மேலான கூட்டம் இருந்தது. இயேசு திரளான மக்களைக் கண்டு மனதுருகி அவர்களில் பிணியாளிகளாய் இருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார். இயேசு 5000 புருஷர்களுக்கும் அதிகமான பெண்களையும் பிள்ளைகளையும் கண்டபோது, அவரது உள்ளம் உருகியது. அவர் அவர்களில் இருந்த பிணியாளிகளைக் குணமாக்கி அந்தத் திரள் கூட்டம் மக்களுக்கும் உணவளித்தார். அவர் ஏன் இதைச் செய்தார்? அவர்கள்மேல் இரக்கம் கொண்டதினாலேயா? இல்லை. அவர்கள்மேல் ஏற்பட்ட மனதுருக்கத்தினாலேயே அவ்வாறு செய்தார்.

இயேசுவுக்கு அம்மக்கள் மீது அர்ப்பணிப்புடன் கூடிய அன்பு இருந்தது. இந்த அன்பு நற்கிரியைகள் மூலம் வெளிப்பட்டது. இது தான் **மனதுருக்கம் ! கிரியை செய்யும் அன்பு !!**

அடுத்தபடியாக இதே பண்பை இன்னொரு சந்தர்ப்பத்திலும் பார்க்கிறோம். இயேசு 4000 பேரைப் போஷித்த நிகழ்ச்சியிலும் இது வெளிப்படுத்தப்படுகிறது. பின்பு "**இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்து, ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் என்னிடத்தில் மூன்றுநாள் தங்கியிருந்து, சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்; இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்துபோவார்களே என்றார்**"(மத்.15:32). இங்கு காணப்படும் உணர்ச்சியும் இரக்கம் அல்ல. **இது உள்ளத்தில் ஆழமாக வேரூன்றிய மனதுருக்கமாகும்.** இயேசு இவையெல்லாவற்றையும் அன்பின் அடிப்படையில் செய்தார்.

கடைசியாக, மத்தேயுவில் இன்னொரு சம்பவத்திலும் இயேசுவின் மனதுருக்கத்தைக் குறித்துப் பார்க்கிறோம் (மத்.20:29-34). இயேசு

எரிகோ பட்டணத்தினுள் நுழைந்தபோது, அவர் வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர்களைக் கண்டார். அவர்கள் இருவரும் இயேசு வருகிறதை அறிந்ததும் உரத்த சத்தமாய், **"ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்"** (வச.30) என்று கூப்பிட்டார்கள். கூட்டத்தார் அவர்களைப் பேசாமல் இருக்கும்படி அதட்டினார்கள். இதைக் கேட்டதும் அவர்கள் இன்னும் அதிக சத்தமாய், **"ஆண்டவரே, தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும்,"** என்று கூப்பிட்டார்கள். இயேசு இதைக் கேட்டதும், நின்று, அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து வரும்படி கட்டளையிட்டார். "நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறீர்கள்" என்று கேட்டார். "அதற்கு அவர்கள்: ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்க வேண்டும் என்றார்கள்". இயேசு" **மனதுருகி**" அவர்கள் கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின் சென்றார்கள்"(வச.32-34).

இது தேவையிலிருக்கும் ஒருவர் மீது இரக்கம் கொண்டு செய்யப் படும் ஒரு செயல் அல்ல. இது மனதுருக்கத்தின் வெளிப்பாடாகும். இது இயேசுவின் குணாதிசயத்திலிருந்து வந்தது. அவருக்கு மக்கள் மீதிருக்கும் கரிசனையிலிருந்துமட்டும் உண்டாவதல்ல. இரக்கம் காட்டுவதைவிட இயேசு மக்கள் மீது கொண்டிருந்த அர்ப்பணிப்பு காரணமாக மனதுருக்கம் தோன்றியது.

இயேசுவின் மனதுருக்கமும் நீங்களும்.

கலிலேயாவில் பசியாயிருந்த ஐயாயிரத்திற்கும் அதிகமானவர் களிடத்தில் இயேசு காட்டிய மனதுருக்க உணர்வை உங்களிடமும் காட்டுகிறார். எரிகோவின் வழியருகே இருந்த இரண்டு குருடர் களுக்குப் பார்வையளித்த இயேசுவின் மனதுருக்க உணர்வு இன்னும் மாறவில்லை. "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும், என்றும் மாறாதவரா யிருக்கிறார்"(எபி.13:8). இன்றைக்கு உங்களுடைய தேவைக்கும் இயேசுவின் அதே மனதுருக்கம் உண்டு.

ஃபிராங்க் கிராயப் தனிமையை உணர்ந்தபோது, கைவிடப்பட்டு, ஆதரவற்ற நிலையில் இருந்ததாக நினைத்தபோது, அவருக்கு இரக்கத்தைவிட அதிகமான உதவி தேவைப்பட்டது. அவருக்கு **மனதுருக்கம் மிக்க இயேசு** தேவைப்பட்டார். உங்களுக்கும் அவரே தேவை. இரக்கம் சில நிமிஷங்கள் உங்களுக்கு நிம்மதியைத் தரலாம்.

ஆனால் மனதுருக்கம் உங்கள் வாழ்நாள் முழுவதும் அன்றாடமும் உங்கள் தேவையைச் சந்திக்கும்.

உங்கள் மீது இயேசு காட்டும் **மனதுருக்கம்** நீங்கள் தனிமையில் இருப்பதினால் தோன்றியதல்ல. நீங்கள் கைவிடப்பட்டதாக உணர்ந்ததினால் அவருக்கு ஏற்பட்டதுமில்லை. இயேசுவின் **மனதுருக்கம்** அவருடைய குணாதிசயமாகவே இருக்கிறது. அவர் யார் என்பதை அறிந்து அவர்மீது நம்பிக்கை கொள்ளு. அவர் உங்கள்மீது காட்டும் உணர்வுகளை ஏற்றுக்கொள்ளலாம். அவருடைய உணர்வுகள் உண்மையானவை. ஏனெனில் அவர் உண்மையானவர்!

அருமையான தேவபிள்ளையே! உன்மீது உண்மையாய் மனதுருக்கம் கொள்ளும் ஒருவர் இருக்கிறார் என்பதை இப்பொழுதாவது நம்புகிறாயா? **இயேசு உனக்காகப் பரிதபிக்கிறார். உன்மீது மனதுருக்கம் கொள்கிறார்.**

ஆனால் உன்மீது மனதுருகும் இயேசு வெறும் உடைந்த இருதயத்தை அல்ல, அவர் தமது நொறுக்கப்பட்ட சரீரத்தையே கொடுத்தார். அவரது மனதுருக்கத்தை வார்த்தைகள் மூலம் நாம் அறிந்துகொள்ள இயலாது. ஆனால் அவரது செய்கைகளிலிருந்தே நாம் அதைத் தெரிந்துகொள்கிறோம்.

இரக்கம் இயேசுவைக் கல்வாரிக்கு அனுப்பவில்லை. அவருடைய மனதுருக்கமே அவரை அனுப்பியது. நாம் அநேகவேளைகளில் நம் மீதுள்ள தேவனுடைய அன்பின் வெளிப்பாடே சிலுவை என்று நினைக்கிறோம். "**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**" (யோவான் 3:16). இது பிதாவினுடைய அன்பை நிரூபிக்கிறது.

ஆனால் இயேசுவும் உங்கள் மீதுள்ள தமது அன்பை வெளிப்படுத்தினார். "**ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை**" (யோவா.15:13). இயேசு இரக்கம் காரணமாக அல்ல, அன்பு காரணமாகவே மரித்தார். இதுவே அவரது **மனதுருக்கம்!** இதுவே அவரைக் கல்வாரிக்கு அழைத்துச்சென்றது. அவரது அன்பு உங்கள் இரட்சிப்புக்கு வழிவகுத்தது. அவரது அன்புதான் நீங்கள் தனிமையை உணரும்போது உங்களைச் சந்திக்கிறது.

மற்றவர்களிடம் அன்பும் மனதுருக்கமும் காட்டவேண்டும் என்பதற்கு இயேசுவே உங்களுக்கு முன்மாதிரியாய் இருக்கிறார். அவர் கூறுகிறதாவது: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவா.13:34). இங்கே அவர் குறிப்பிடும் அன்பு ஒப்பற்ற தெய்வீக அன்பு (AGAPE LOVE). இந்த அன்பில் ஒரு தெய்வீகத் தன்மை உண்டு. இந்த அன்பு இரக்கத்தைக் காட்டிலும் உயர்ந்தது. **இதுவே மனதுருக்கம்!**

இயேசு உங்களை நேசிக்கும்படி அனுமதிக்கமாட்டீர்களா? அவர் உங்கள் மீது எவ்வளவு அன்பும், கரிசனையும், மனதுருக்கமும் வைத்துள்ளார் என்பதை வெளிப்படுத்த இடம்கொடுக்கமாட்டீர்களா? நீங்கள் கைவிடப்பட்டது போல் தோன்றும்போதும், தனிமையை உணரும்போதும், ஒருவரும் உங்களை அறியவில்லை என்று நினைக்கும்போதும், ஒருவரும் உங்களைப் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கும்போதும், ஒருவரும் உங்களுக்காகக் கவலைப்படவில்லை என்று நினைக்கும்போதும் இயேசுகிறிஸ்து உங்களிடத்தில் கரிசனை உள்ளவராயிருக்கிறார் என்பதை நினைவுகூருங்கள். அவர் உங்கள் நிலையை அறிகிறார், புரிந்துகொள்கிறார்.

நீங்கள் கைவிடப்பட்டிருக்கவில்லை. நீங்கள் ஒருபோதும் தனிமையாகவும் இல்லை. உங்கள் மீது அன்பும் மனதுருக்கமும் உள்ள ஒருவர் உங்களுக்குத் துணையாய் இருக்கும்போது நீங்கள் இப்படியெல்லாம் நினைக்க வேண்டிய அவசியம் இல்லையே!

அத்தியாயம் - உ

நான் பாரங்கள் சுமந்து தவிக்கும்போது இயேசு என்னை விசாரிக்கிறவராயிருக்கிறாரா?

சந்தோஷத்தால் சங்கீதம் பாடமுடியாதபடி என் இருதயம் வேதனையால் நிறைந்திருக்கும்போது இயேசு எனக்காகப் பரிதபிக்கிறாரா?

என் பாரச் சுமைகள் என்னை அழுத்தி, என் கவலைகள் துன்பம் தரும் போதும், என்னுடைய பாதைகள் சோர்வு நிறைந்ததாயும், நீண்டதாயும் தோன்றும்போதும் இயேசு எனக்காகக் கவலைப்படுகிறாரா?

சில வருடங்களுக்கு முன்னால் நான் இங்கிலாந்தின் தென் பகுதியில் பயணம் செய்து அங்குள்ள மகா பெரிய கான்டர்பரி பேராலயத்தைப் பார்வையிட்டேன். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தேவாலயத்தில் சில பழுதுகளை சரிசெய்வதற்கு அப்பொழுது நிதி திரட்டிக் கொண்டிருந்தார்கள். அதற்கென நான் ஒரு சிறு தொகையைக் கொடுத்தேன். அவர்கள் எனக்கு ஒரு பெரிய விளம்பரப் படத்தைத் (Poster) தந்தார்கள். அப்படத்தில் அப்பேராலயத்தின் முன் திரள் கூட்டம் மக்கள் நிற்பதுபோலக் காட்டப்பட்டிருந்தது. அதில் எழுதப் பட்டிருந்த செய்தி, **"நாங்கள் உங்கள்மேல் கரிசனையுள்ளவர் களாயிருக்கிறோம்"** என்பதாகும்.

செய்தி சுருக்கமானதே. உண்மையான கரிசனை உள்ளவர்கள் ஒரு பிரச்சனையைக் குறித்து அதிகம் பேசமாட்டார்கள். அவர்கள் அதைத் தீர்ப்பதற்காக ஏதாவது செய்வார்கள். உங்களுக்கு ஒரு தேவை இருக்கும்போது மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்கிறார்கள் என்பதிலிருந்து அவர்கள் உங்கள்மேல் அக்கறை உள்ளவர்களாயிருக் கிறார்களா என்பதை அறிந்துகொள்வீர்கள்.

"கரிசனை" என்பது நம்முடைய சொல் பட்டியலில் முக்கிய இடம் வகிக்கிறது. நமது உடல் பராமரிப்பைக் குறித்து அதிகமாய் பேசுகிறோம். நமது தனிப்பட்ட கவலையைக் குறித்து அதிகம் பேசுகிறோம். மற்றவர்களுக்குத் தொல்லை தருபவர்களைப் பற்றியும், கவலையடைகிறவர்களைப் பற்றியும் நாம் பேசுகிறோம். **"உனக்கு**

என்மேல் கரிசனை இல்லை" அல்லது **"அவர்கள் என்னைக் கண்டு கொள்வதே இல்லை"** எனக் கருதி பல உறவுகளை நாம் இழந்ததும் உண்டு. எனவே எல்லா வகையிலும் மற்றவர்களிடத்தில் **"கரிசனை"** கொள்வது முக்கியமான ஒன்றாகும் என்பதை நாம் அறிகிறோம்.

இந்நாட்களில் மற்றவர்களுக்காக பரிதபிக்கிறவர்கள் உலகில் மிகவும் குறைவு என்று தெரிகிறது. 20 வயதுக்குட்பட்ட ஆண்களும் பெண்களும் தற்கொலை செய்வது மிகவும் அதிகரித்துள்ளது. அவர்கள் தற்கொலை செய்யுமுன், "நான் வாழ்வதில் பயனில்லை. நான் வாழ்கிறேனா, சாகிறேனா என்று கவலைப்பட யாருமில்லை. நான் சாகிறதே மேல் என்று நம்புகிறேன்" என்று குறிப்பு எழுதி வைத்துச் செல்லுகிறார்கள். நம் வாழ்க்கை பொருளற்றதாகவும், தவறாகப் புரிந்து கொள்வதால் ஏற்பட்ட பாரத்தினால் வேதனையுற்றதாகவும் இருக்கும் போது நம்மை விசாரிப்பதற்கு **"இயேசு"** இருக்கிறார் என்பதை நாம் அறியவேண்டும். நீங்கள் கவலையோ, பாரமோ, வேதனையோ அனுபவிக்கும்போது இயேசு உங்களுக்காகப் பாரப்படுகிறார்.

நம்மை பாரங்கள் அழுத்தும்போது .... !

இப்பொழுது உங்கள் உள்ளத்தைப் பாரமாய் அழுத்திக் கொண்டிருக்கும் சுமை எது? உங்களுக்குத் துன்பமும் வேதனையும் தந்து உங்கள் எதிர் காலத்தை நம்பிக்கையற்றதாகச் செய்வது எது? உங்கள் பாரங்கள், கவலைகள் என்னென்ன?

உங்களுக்குக் கடன் கொடுத்தவர்கள் தொலைபேசியில் அடுத்த தவணை எவ்வளவு தரப் போகிறீர்கள் என்று கேட்கிறார்களா?

உங்கள் குழந்தைகள் பிணிகளால் அவதிப்படுகிறார்களா? சமீப காலமாக உங்கள் பிள்ளைகளின் சுகவீனத்தால் அதிக மருத்துவச் செலவு ஏற்படுவது போல தோன்றுகிறதா?

உங்கள் பாரங்களுக்காக யாராவது கவலைப்படுகிறார்களா? நீங்கள் சிறுமைப்படுத்தப்பட்டபோதும், ஒரு நல்ல வேலையைப் பெறமுடியாமல் இருக்கும்போதும் யாராவது உங்களுக்காக கவலைப்பட்டார்களா?

உங்கள் திருமண காரியங்கள் பெரிய சிக்கலில் இருக்கும்போது, எப்படி யெல்லாம் நடந்தேறப் போகிறதோ என்று திகைத்துக் கொண்டிருக்கும் போது உங்களை விசாரிப்பதற்கு யாராவது இருக்கிறார்களா?

நீங்கள் செய்வதெல்லாம் தவறாக முடிகிறது. இந்நிலையில் உங்கள் மேல் கரிசனையுள்ளவர்கள் யாராவது இருக்கிறார்களா?

நிச்சயமாக உங்களை விசாரிக்கிறவர் ஒருவர் இருக்கிறார். ஆம், நம் எல்லோருக்கும் ஒருவர் உண்டு. அந்தப் பாடலை எழுதியவர் அதனால்தான் இப்படி எழுதியுள்ளார்: என்னைப் பாரங்கள் அழுத்தும்போதும், கவலையும்

துன்பமும் மேற்கொள்ளும்போதும் இயேசு எனக்காகக் கவலைப்படுகிறாரா? இதன் விடை உங்களுக்குத் தெரியும்.

லூக்.10:38-42இல் மார்த்தாள், மரியாள் ஆகியோரைப் பற்றிய ஒரு அற்புதமான சம்பவத்தை நாம் பார்க்கிறோம். லூக்கா இவர்களைப் பற்றிக் கூறும்போது:

"...அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர் கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்" (லூக்கா 10:38-42).

பலர் இந்த சம்பவத்திற்கு நான் பொருத்தமாகக் கண்டுள்ள முடிவைவிட வித்தியாசமான ஒரு முடிவை நினைத்துக் கொண்டிருக் கின்றனர். இந்த சம்பவத்தில் மார்த்தாளின் நிலை எனக்கு மிகவும் பிடித்தது. மரியாளும் நல்ல காரியத்தைத்தான் செய்து கொண்டிருக் கிறாள். இந்த சம்பவத்தில் மார்த்தாள் ஒரு கொடுமைக்காரியைப் போல பலராலும் நினைக்கப்படுகிறாள். மார்த்தாள் வீட்டில் முக்கியமான வேலையை செய்துகொண்டிருக்கிறாள். அது சமையல் வேலையாகத் தான் இருந்திருக்கும். அதைத் தனியாகச் செய்வதில் அவளுக்கும் பல கஷ்டங்கள் இருந்தன. தங்கை மரியாள் கூட உதவியாக இருந்தால் மிகவும் எளிதாக இருந்திருக்கும். ஆனால் மரியாள் அக்காவுக்கு உதவி செய்யாமல் அந்த நேரத்தில் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவரது வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். என்னைப் பொறுத்த வரையில் மார்த்தாள்தான் நமக்கு ஒரு பாடம் கற்பிக்கிறாள். இந்த இயேசு நமக்காக எவ்வளவாக கவலைப்படுகிறார் என்பதைக் மார்த்தாளே இங்கு காட்டுகிறாள்.

பாரங்கள் உங்களை அழுத்தும்போது, கவலைகள் உங்களுக்குத் துன்பத்தைத் தரும்போது இயேசு உங்களை விசாரிக்கிறவராயிருக்

கிறாரா? இந்தக் கேள்வியைத்தான் மார்த்தாள் இயேசுவிடம் கேட்டாள். என் சகோதரி எனக்கு உதவி செய்யவில்லையே. இயேசுவே, இதைக் குறித்து உமக்குக் கவலை இல்லையா என்றாள். பாரங்கள் நம்மை அழுத்தும்போதும், கவலைகள் நமக்கு வேதனையைத் தரும்போதும் இயேசு நம்மேல் எவ்வளவு கரிசனை உள்ளவராயிருக்கிறார் என்பதை இந்த வேதாகம சம்பவம் நமக்கு உணர்த்துகிறது.

தலைமைப் பொறுப்பில் இருப்பவரின் கவலை

வசனம் 38 இவ்வாறு கூறுகிறது: "பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார்" என்று உள்ளது. யோவான் 11, 12 அதிகாரங்களில் அது பெத்தானியா கிராமம் என்று அறிகிறோம். பெத்தானியா எருசலேமிலிருந்து 2 மைல் தூரத்தில் உள்ளது. இக்கிராமம் ஒலிவ மலையின் கிழக்கு, தெற்கு சரிவுகளில் அமைந்திருந்தது. இயேசு அந்தக் கிராமத்தில் நுழைந்தபோது, "**அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்**" என்று கூறப்பட்டுள்ளது. மார்த்தாள் லாசருவின் சகோதரி. இந்த லாசரு இயேசுவுக்கு மிகவும் அன்பான சிநேகிதன். ஆனால் இவன் மரித்தபின் இயேசு அவனை உயிரோடு எழுப்பினார் (யோவான் 11:43-44). மார்த்தாள், மரியாளுக்கும் சகோதரியாய் இருந்தாள். இவர்கள் இருவரிலும் எல்லா இடங்களிலும் மார்த்தாளின் பெயரே முதலாவது கூறப்பட்டுள்ளது (லூக்.10:38; யோவான் 11:19,20; யோவா.12:2,3). ஏன்? மார்த்தாள்தான் இருவரிலும் மூத்தவளாக இருந்திருப்பாள்.

ஒருவேளை நீங்கள் உங்கள் குடும்பத்தில் மூத்த மகனாகவோ, மகளாகவோ இருக்கலாம். பொதுவாக எல்லா குடும்பத்திலும் மூத்த மகனுக்கும் மகளுக்கும் அதிக பொறுப்புகள் உண்டு. ஏனெனில் மூத்த பிள்ளைகளுக்கு இளையவர்களைவிட அனுபவ முதிர்ச்சியும் இருக்கும். கடமை உணர்ச்சியும், பொறுப்புணர்ச்சியும் அதிகம் இருக்கும். இவை அனைத்தையும் இந்த சம்பவத்தில் காண்கிறோம்.

மார்த்தாளே இவர்களது வீட்டில் விருந்து உபசரிப்பவளாகச் செயல்படுகிறாள். மரியாள் அல்ல. மார்த்தாள்தான் இயேசுவைத் தன் வீட்டுக்கு வரவேற்றாள். இது மார்த்தாளைக் குறித்து நமக்கு என்ன கூறுகிறது? மார்த்தாள்தான் வீட்டில் எப்போதும் தலைமைப் பொறுப்பில் இருந்தாள் என்பதைக் காட்டுகிறது. இவள்தான் மற்றவர்களையும் கட்டுப்படுத்தி வந்தாள். எனவே இவள்தான் மரியாளைவிட அடக்குமுறை உள்ளவளாயிருந்தாள். தன் தங்கை மரியாளைவிட

வீட்டில் பொறுப்பும், உத்தரவாதமும் அதிகம் உள்ளவளாயிருந்தாள். இது எல்லா வீட்டிலும் நிலவும் சகஜமான காரியம்தான். மூத்தவர், பொறுப்புள்ளவர் என்ற நிலையில், இளையவர்களுக்குத் தெரியாத பல காரியங்கள் மூத்தவர்களுக்குத் தெரியும். இங்கே மார்த்தாள் மூத்தவளாயிருந்தபடியால் அவளுக்குப் பொறுப்புகளும், கவலைகளும் இருந்தன. அதனால்தான் இயேசுவிடம் அப்படிக் கேட்டாள்.

பொறுப்புகளைத் தனியாகச் சந்தித்தல்

மரியாளிடத்தில் நிச்சயமாக ஒரு மென்மையான இருதயம் இருந்தது. லூக்.10:39இல் "**அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்**" என்று பார்க்கிறோம். "**உட்கார்ந்து**" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் சொல்லுக்கு "**அருகாக**" என்று பொருள் உள்ளது. மரியாள் இயேசுவின் உபதேசத்தைத் தூரத்தில் இருந்துகொண்டு கேட்கவில்லை. இயேசுவின் பாதத்தருகே அவள் உட்கார்ந்து அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். இதற்காக மரியாளை யாரும் குற்றம் சொல்ல முடியாது. ஆனால் அவள் இச்செயலைச் செய்யும்போது மார்த்தாளை விட்டுவிட்டாள். தன்னுடன் சேர்த்துக்கொள்ளவில்லை. எனவே மார்த்தாள் வேலைகள் முழுவதையும் தனியாகச் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. மார்த்தாளுக்கு உதவிசெய்யும்படி மரியாள் ஒரு விரலைக்கூட அசைக்கவில்லை.

சம்பவத்திற்கு வருவோம். மார்த்தாள் மூத்தவள். அவள் இயேசு தங்கள் கிராமத்துக்கு வருவதைக் குறித்துக் கேள்விப்பட்டாள். அவள் தானாக முன்சென்று இயேசுவைத் தன் வீட்டுக்கு அழைத்துவந்தாள், வரவேற்றாள். வீட்டில் வந்திருக்கும் விருந்தினருக்குக் கொடுக்கப்பட வேண்டிய அனைத்தையும் ஆயத்தம் செய்யவேண்டியது அவளது பொறுப்பாயிற்று. இதை நன்றாகக் கவனியுங்கள். அவள் தன் எஜமானாகிய இயேசுவுக்கு ஒரு நல்ல விருந்து படைக்கப் போகிறாள். ஆனால் இயேசு தனியாக இல்லை. இயேசுவுடன் 12 சீடர்கள் உண்டு. லாசருவும், மரியாளும் உண்டு. இன்னும் இயேசுவைப் பார்க்கவந்த இன்னும் பலரும் இருந்திருப்பார்கள். மார்த்தாள் சுமார் 15 பேருக்கு மேல் தேவையான உணவை ஆயத்தம் செய்யவேண்டும். இதை நினைக்கும்போது மார்த்தாளுக்குத் தலை வெடித்துவிடும்போல் இருந்திருக்கும். எல்லோரும் பசியாய் இருக்கிறார்கள். இவர்கள்

அனைவருக்கும் விருந்து தயாரிக்கும் வேலையை ஒருவருடைய துணையுமின்றி மார்த்தாள் தனியாகச் செய்துகொண்டிருந்தாள்.

மார்த்தாளின் நிலை மிகுந்த நெருக்கடிக்குள்ளானது. அந்நாட்களில் நவீன சமையல் அடுப்புகள் இல்லை. குளிர்சாதனப் பெட்டி இல்லை. உடனே கொடுக்கத்தக்க ஆயத்த நிலை உணவுகள் ஏதும் இல்லை. தனக்கு உதவிக்கு யாரும் இல்லை. மேலும் சுமார் 15 பேர் அமர்ந்து சாப்பிட இடம் ஆயத்தம் செய்ய வேண்டும். உணவு பரிமாறப் போதுமான பாத்திரங்கள் வேண்டும். இப்படி எண்ணற்ற வேலைகள் இருந்தன. இவையனைத்தும் முக்கியமானவை, அவசரமானவை. மார்த்தாளே விருந்து கொடுப்பவள். தனியாக இவ்வளவையும் கவனிக்க வேண்டிய தாயிற்று. இவ்வளவுக்கும் அவளுடைய தங்கை மரியாள், அவள் ஒருவேளை சிலரைப் போலச் சோம்பேறியாக, ஒருவேலையும் செய்யாதவளாக இருந்தாலும்கூட, இத்தகைய சூழ்நிலையில் சில காரியங்களைச் செய்து உதவலாமே!

அக்கா சமையல் வேலையைக் கவனிக்கும்போது, இவள் சாப்பாட்டு மேஜையையும் இருக்கைகளையும் ஆயத்தம் செய்யலாமே! மரியாள் உணவு சமைக்கவில்லை. உணவு பரிமாறுவதிலும் உதவி செய்யவில்லை. மார்த்தாளின் கண்ணோட்டத்தில் மரியாள் இயேசுவின் பாதத்தண்டையில் உட்கார்ந்து அவருடைய போதனைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். இயேசுவின் அருகில் இருப்பதை அனுபவித்தாள். மார்த்தாளுக்கும் இயேசுவிடம் உட்கார்ந்து அவர் பேசுவதைக் கேட்க ஆசைதான். ஆனால் அவர்களுக்கு உணவு ஆயத்தப்படுத்துவது யார்?

நீங்கள் மார்த்தாளின் இடத்தில் இருந்தால் உங்களையும் இந்த பாரம் அழுத்தியிராதா? அந்நேரம் உங்களுக்கு உதவிசெய்யாமல் அமர்ந்திருக்கும் மரியாள் மீது கோபம் வராதா? லூக்கா 10:40 இல் "மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னைவிட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்".

மார்த்தாளே எல்லா வேலைகளையும் செய்துகொண்டிருந்தாள். அவளுடைய சோம்பேறியான சகோதரி ஒன்றும் செய்யாமல் அமர்ந்திருக்கிறாள். "**வருத்தமடைந்து**" என்னும் சொல், உடல் சார்பாகவும், உள்ளம் சார்பாகவும் சோர்வடைவதைக் குறிக்கும். மார்த்தாளுக்கு உடலிலும் சோர்வு, உள்ளத்திலும் சோர்வு.

உண்மையில் மார்த்தாளினால் இன்னும் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. அவள் தனக்கிருந்த வருத்தத்தில் தன் தைரியத்தை யெல்லாம் வரவழைத்து ஆண்டவரிடத்தில் புகார் கூறிவிட்டாள். எல்லா வேலைகளையும் அவள் தானே செய்து கொண்டிருந்தாள். அங்கே மரியாள் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்து கொண்டிருக்கிறாள். இறுதியில் மார்த்தாள் கோபத்தினாலும் மன உளைச்சலினாலும் வெடித்து விட்டாள். "இயேசுவே! அவள் இப்படிச் செய்வதில் உமக்குக் கவலை இல்லையா?" என்று கேட்டுவிட்டாள். தனியாகக் கிடந்து உழைத்து நான் அல்லல் படுகிறேனே! என்றாள்.

உங்கள் காரியம் என்ன? நான் அங்கே இருந்திருந்தால் இப்படித் தான் செய்திருப்பேன் என்கிறீர்களா?

நீங்களும் இதே சூழ்நிலையையே அனுபவித்திருப்பீர்கள். உங்கள் வீட்டிலோ, சபையிலோ, நீங்கள் தலைவராக உள்ள இடத்திலோ இப்படிப்பட்ட சூழ்நிலைகள் வரும். உங்களுக்கு யாரும் உதவிக்கு வராதது போல் தோன்றும். நீங்கள் ஒருவரை உபசரிக்கிறீர்கள். யாரும் உங்களுக்கு உதவிசெய்யவில்லை. ஒரு வேலையைச் செய்துமுடிக்க வேண்டும். யாருடைய உதவியும் இல்லை. உங்கள் வயதான பெற்றோ ரைக் கவனிக்க வேண்டும். உங்களுக்கு ஒரு சகோதரனும், சகோதரியும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாரும் இதைக் கண்டு கொள்வதே யில்லை. நீங்கள் இவ்வாறு பாரத்துடன் தனியாக உழைத்துக் கொண்டிருக்கும்போது இயேசு உங்களுக்காகக் கவலைப்படுகிறாரா?

நீங்கள் பலர் சாப்பிட மேஜையில் உணவு பரிமாறுகிறீர்கள். மற்றவர் களின் தேவைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களிடம் உள்ளதெல்லாம் தீர்ந்துகொண்டிருக்கிறது. சாப்பிட்ட பாத்திரங்கள் குவிந்து கிடக்கின்றன. தரைவிரிப்பு சுத்தம் செய்யப்படவேண்டும். நாயை வெளியே நடக்கும்படி அழைத்துச் செல்லவேண்டும். பிள்ளைக ளெல்லாம் தொலைக்காட்சிப் பெட்டியின்முன் உட்கார்ந்து எதையோ ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் கணவர் வெளியில் யாருடனோ அரட்டையடித்துக் கொண்டிருக்கிறார். உங்கள் கை விரல்கள் எலும்பாகத் தேயும் அளவுக்கு நீங்கள் வேலை செய்துகொண்டிருக்கும் போது, மற்றவர்கள் எல்லாம் உதவிசெய்ய முன்வராமல் தங்கள் தங்கள் போக்கில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, உங்களுக்காக இயேசு கவலைப்படுகிறாரா? தொடர்ந்து வாசியுங்கள்.

கட்டுப்பாட்டை இழந்ததுடன், தன்னுடைய வேலையையும் இழந்துவிட்டார். அவர் தன்னுடைய பெயர், புகழ், அந்தஸ்து அனைத்தையும் இழந்துவிட்டார்.

அந்தப் பருவகால முடிவில் தொழில் ரீதியான விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் ஒரு பெரிய விருந்து நடத்தப்பட்டது. அந்த விருந்துக்கு வெற்றி பெற்ற பயிற்சியாளர் என்ற முறையில் டாம் லாண்ட்ரி யும் அழைக்கப்பட்டிருந்தார். ஒவ்வொருவரும் தன்னுடன் ஒரு விருந்தா ளியையும் அழைத்துச்செல்லலாம். டாம் லாண்ட்ரி யாரை அழைத்துச் சென்றார் என்று நினைக்கிறீர்கள்? எல்லோராலும் வெறுத்துக் குறை கூறப்பட்ட ஊடி ஹெய்ஸ் என்பவரை அழைத்துச் சென்றார். இயேசு கிறிஸ்துவிலும் இதே மனப்பான்மையை நான் காண்கிறேன். இந்தச் சம்பவத்தில் இயேசு மார்த்தாளுக்காகவும் கவலைப்பட்டார் என்று காட்டப்படுகிறது. அவள் பாரங்களினாலும், வருத்தத்தாலும் தொய்ந்து போயிருந்தாள். ஆனால் இயேசு அவளுக்காகக் கவலைப்பட்டார்.

மார்த்தாள் நல்ல பங்கைத் தெரிந்துகொள்ளாததற்காக நாம் அவளைக் குற்றம் சாட்டுவோம். நாம் அவளைப் பார்த்து, "மார்த்தாளே, நீ எதைக் குறித்து இயேசுவிடம் குறை கூறுகிறாய்" என்று கேட்போம். இந்த இடத்தில் மார்த்தாளுக்குத் தேவைப்பட்டது கரிசனையே அல்லாமல் குறை கூறுவதல்ல.

நீங்கள் அங்கே இருந்திருந்தால் மார்த்தாளின் நிலை நன்றாகப் புரிந்திருக்கும். சுற்றிலும் நிறையப்பேர் இருந்தும், ஒருவரும் உதவி செய்யாத நிலையில் ஒருவர் தனியாக அத்தனை வேலைகளையும் செய்து கஷ்டப்படும் நிலை அங்கு இருந்தது. அதனால்தான் மார்த்தா ளுக்கு அதிக உதவி அவசியமாகத் தேவைப்பட்ட அந்த நேரத்தில் இயேசுவின் பதில் எப்படி இருந்தது என்பதைக் கவனிப்பது முக்கியம். இயேசு சொன்னார்: "தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடு படாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்"(லூக்.10:42). மார்த்தாள் புகார் கூறியதற்காக இயேசு அவளைக் கண்டிக்கவில்லை. அவருக்கு அவளுடைய கவலை புரிந்தது. அவர் அவள்மீது இரக்கம் கொண்டார். அவரது முழு வாழ்வும் அதில் எதிரொலித்தது. மார்த்தாளின் புகார் முற்றிலும் சரியானது, உண்மையானது. இயேசு அதை குறைத்து மதிப்பிடவில்லை. அவர் மார்த்தாளுக்கு மிக முக்கியமாகத் தேவை யானது என்ன என்பதைக் குறித்துக் கவலைப்பட்டார். அவளுக்கு எது சிறந்தது என்று அவர் விரும்பியதைக் குறிப்பிட்டார்.

தேவையானது ஒன்றே!

"தேவையானது ஒன்றே" என்று இயேசு கூறியதன் பொருள் என்ன? விருந்தினருக்குக் கொடுக்க இன்னொரு பொருள் தேவையில்லை. இன்னும் கொஞ்சம் சாப்பிடக் கொடுக்கத் தேவையில்லை. இன்னொரு காய்கறி, கூட்டு தேவையில்லை. கூடுதலாக இன்னொரு பண்டமும் தேவையில்லை. இன்னொரு தட்டு தேவையில்லை. இன்னொரு இறைச்சித் தட்டு தேவையில்லை. இன்னொரு பழக்கலவை தேவை யில்லை. அங்கு தயாரிக்கப்பட்டிருக்கும் விருந்தைப் பரிபூரணமாக்க இன்னொரு பொருள் தேவையில்லை என்று இயேசு கூறினார்.

தேவைப்பட்ட ஒரே பொருள் இருதயப் பூர்வமாக ஆண்டவருக்குத் தம்மை அர்ப்பணித்தல் ஆகும். தேவையான ஒன்று, இறைச்சி வகைகளின் தயாரிப்பும் அல்ல. மத்திய கிழக்கு நாடுகளின் சிறந்த உணவு தயாரிப்புகளுமல்ல.

ஆண்டவருடன் நேரம் செலவிடுவதும், இயேசுகிறிஸ்துவின் அருகில் இருந்து, அவருடைய ஆளத்துவத்தைப் புகழுதல், அவரது பிரசன்னத் தைக் கிரகித்துக் கொள்ளுதல், அவர் கூறும் சத்தியங்களை ஏற்றுக் கொள்ளுவதும் ஆகியவையே தேவையான ஒன்றாகும்.

"பற்றுதலுடன் ஆண்டவரின் அருகில் இருப்பதும் அவரைப் புகழ்ந்து துதிப்பதும்" ஆகிய இதைவிடச் சிறந்த காரியம் ஏதாவது உண்டா? மரியாள் இதைத் தான் தெரிந்துகொண்டாள். மார்த்தாளுக்கு யாரும் உதவி செய்யவில்லையே என்று இயேசு கவலைப்பட்டாரா? ஆம். அவர் "மார்த்தாளே, மார்த்தாளே" என்று அழைத்தார். அவளைக் குற்றம் சுமத்தும்படி அழைக்கவில்லை. மென்மையான பாசத்துடன் அழைத்தார். உண்மையான அநுதாபத்துடனும் மார்த்தாளை அழைத்தார். மார்த்தாள் பொறுப்புடன் செயல்படவேண்டும் என்ப தைப் புரிந்து கொண்டார். நல்ல காரியங்களுக்காகக் கவலைப்பட்டுப் பாரமடைவதைக் காட்டிலும், மிகச் சிறந்த காரியங்களை அவள் இழந்துவிடக் கூடாது என்று அவர் விரும்பினார். அன்று அவளுடைய வீட்டில் இருந்த மிகச் சிறந்த ஒன்று "**இயேசுகிறிஸ்து**" ஆவார். எனவே உணவு தயாரித்தலும், உழைத்தலும் முக்கியமற்றவை என்று பொருளல்ல. ஆனால் அதுதான் அன்று மிகமிக முக்கியமான காரியமல்ல. நமக்குச் சிறந்தது எதுவோ அதை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இயேசு கவலைப்படுகிறார்.

1700ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பிலிப் டாட்ரிட்ஜ் என்பவர் இப்படி எழுதினார்:

"தேவனுடைய கட்டளைகள் எவ்வளவு இதமாயிருக்கின்றன! அவருடைய போதனைகள் எவ்வளவு இரக்கமுள்ளவைகள். வாருங்கள், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் பாதத்தில் சமர்ப்பித்து, அவருடைய நிலையான பராமரிப்பை நம்புங்கள். உங்கள் பாரமான சுமை சோர்வடைந்த உங்கள் உள்ளத்தை ஏன் இன்னும் நெருக்கிக் கொண்டிருக்க வேண்டும்? தேவனுடைய உன்னதமான சிங்காசனத்தண்டைக்கு விரைந்து வாருங்கள். அங்கே இனிய இளைப்பாறுதலைக் கண்டடையுங்கள். அவருடைய நன்மை என்றும் நிலைக்கும். அது என்றும் மாறாதது. நான் என்னுடைய பாரங்களை அவர் பாதத்தண்டையில் இறக்கிவைப்பேன். பின்னர் அவரைத் துதித்துப் பாடிக் கொண்டிருப்பேன்".

இயேசு நமது பாரத்தைச் சுமக்கிறவர்

இன்று உங்களை வருத்தும் பாரச் சுமை எது? உங்களைச் சோர்வடையச் செய்வது எது?

- **உங்கள் குழந்தைகளைக் குறித்து கவலை கொள்கிறீர்களா?** இதற்கு நீதி.22:6இல் ஒரு விடை இருக்கிறது. உங்கள் குழந்தைகளைக் குறித்து இயேசு கரிசனை உடையவராயிருக்கிறார்.
- **உங்கள் பொருளாதார, நிதிநிலை குறித்து கவலை கொள்கிறீர்களா?** சங்கீதம் 112:1-4 வசனங்கள் இதைக் குறித்துப் பேசுகின்றன. உங்களிடம் பணம் குறையும்போது இயேசு அதற்காக பரிதபிக்கிறார்.
- **உங்கள் ஆரோக்கியம் குறித்து உங்களுக்குக் கவலையா?** சங்கீதம் 42:11 இப்படிக் கூறுகிறது "என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு"

இன்று நீங்கள் எதைக் குறித்தாவது கவலைப்படுவீர்களானால், இந்த உபதேசத்தைக் கவனியுங்கள்:

"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" (1பேதுரு 5:7).

நீங்கள் கவலையும், பாரமும் அனுபவிக்கும்போது, இயேசு உங்களுக்காகக் கவலைப்படுகிறார். அவர் உண்மையிலேயே அப்படிச் செய்கிறார். நீங்கள் தனிமையில் அவதிப்படும்போது, வேறு ஒருவரும் உங்கள் கவலைகளையும், பாரங்களையும் சுமக்க முன்வராதபோது, இயேசு உங்கள்மேல் மனதுருகி உங்களுக்கு உதவிசெய்வதற்கு

முன்வருகிறார். ஆம், இயேசு உங்களை விசாரிக்கிறார்! உங்கள் பாரங்களை உங்களை விட்டு நீக்கிவிடும்படி அவர் உங்களுக்குக் கட்டளையிடுகிறார். நாம் பாரங்களை நம்மைவிட்டு விலக்குவதற்கு ஒரே வழி, அவற்றை ஆண்டவருடைய பாதத்தில் இறக்கி வைத்துவிடுவதாகும்.

ஒரு பழைய பாடல் நம் அனைவருக்கும் என்றும் பொருத்தமானது.

"நான் எனது சோதனைகளைக் குறித்து இயேசுவிடம் கூறவேண்டும்.
நான் இந்தப் பாரச் சுமைகளைத் தனியாய்ச் சுமக்கமுடியாது.
என்னுடைய துன்ப நேரத்தில் என் நேசர் எனக்கு உதவி செய்வார்.
அவர் தமக்குச் சொந்தமானவர்களை என்றென்றும்
நேசித்துப் பராமரித்துக் காப்பார்."

இயேசு உங்களுக்காகக் கவலைப்பட்டுப் பராமரிப்பதை எப்பொழு தாவது அனுபவித்திருக்கிறீர்களா? நீங்கள் எப்போதாவது உங்கள் பாரச் சுமைகளை அவர் பாதத்தில் இறக்கி வைத்ததுண்டா? உங்களுடைய வேலைப்பளு அதிகமாகவும், உதவிசெய்வார் யாருமில்லாத நிலையும் இருந்தால், நீங்கள் தடுமாறித் தத்தளிக்கிறீர்களா? அல்லது உங்களுக் காகக் கவலைப்படும் ஆண்டவரை நம்பி சார்ந்திருக்கிறீர்களா?

இயேசு மார்த்தாளிடம், **"கவலைப்படாதே, என்னை நம்பு"** என்றார். இப்படிக் கூறியதால் அன்றுமுதல் மரியாள், மார்த்தாளுக்கு எல்லா வேலைகளிலும் உதவிசெய்வாள் என்று பொருளல்ல. அவள் அப்படிச் செய்ததாகவும் தெரியவில்லை. உண்மையில் இயேசு லாசருவை உயிரோடெழுப்பியப்பின் ஒருநாள் மார்த்தாளின் வீட்டுக்கு வந்தார். அப்போது, **"...இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணி னார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்"(யோவான் 12:1,2).** இங்கேயும் மரியாள் அவளுக்கு உதவி செய்ததாக எந்தக் குறிப்பும் இல்லை. ஆனால் இங்கே மார்த்தாள் மரியாள் மீது எந்தக் குறையும் சொல்லவும் இல்லை.

இங்கேயும் மார்த்தாள் பணிவிடை செய்துகொண்டிருக்கிறாள். இப்பொழுது முழுமனதுடனும், புதிய உணர்வுடனும் உணவு பரிமாறினாள். லாசரு அங்கிருந்த மற்றவர்களுடன் பேசிக் கொண்டி

ருந்தான். லாசரு பந்தியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது" (யோவான் 12:3).

இங்கே மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து பரிமளத் தைலம் பூசிக் கொண்டிருக்கிறாள். மார்த்தாளோ பந்தியில் இருந்த அனைவருக்கும் உணவு பரிமாறிக்கொண்டிருந்தாள். மார்த்தாளின் வேலைப்பளுவில் மாற்றம் ஏதும் இல்லை. ஆனால் அவளுடைய மனநிலையில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. அவள் யாரைப் பற்றியும் யாரிடமும் புகாரோ, குறையோ கூறவில்லை.

மார்த்தாள் தன் பொறுப்பை முக்கியமானதாகக் கருதினாள். இயேசுவுக்கு அவள்மீது கவலையும், அக்கறையும் உண்டு என்று நம்பினாள். அதன்பின் "என்மீது உமக்குக் கவலை இல்லையா?" என்று இயேசுவிடம் ஒருபோதும் மார்த்தாள் கேட்கவில்லை.

இயேசு உங்களுக்காகக் கவலைப்படுகிறாரா? ஆம், அவர் கவலைப் படுகிறார். நிச்சயமாக அவர் உங்கள்மேல் கரிசனையுள்ளவராயிருக் கிறார். மரியாள் செய்ததைப்போல இன்று இயேசுவுடன் முக்கியமான நேரத்தைச் செலவிடுங்கள். மறுபடியும் அவர்மீது உங்கள் அன்பு முழுவதையும் காட்டுங்கள். அவருடைய சமுகத்தில் ஆனந்தம் கொள்ளுங்கள்.

நீங்கள் பாரமும், கவலையும் கொண்டிருக்கும்போதும் நீங்கள் பல கவலைகளினால் மன உளைச்சல் அடைந்திருக்கும்போதும், நீங்கள் பல துன்பங்களாலும், வேதனைகளாலும் நிம்மதியிழந்திருக்கும் போதும், உங்களை நேசிக்கும் இயேசு உங்கள் அருகில் இருக்கிறார் என்னும் நினைவினால் மன ஆறுதல் அடையுங்கள். தேவனுடைய கவனமும், கவலையும், கரிசனையும் உங்கள்மீதே இருக்கிறது. அதைச் சந்தேகப்படாதேயுங்கள். அதை மறந்துவிடாதேயுங்கள்.

ஆம், இயேசு உங்கள் மேல் கரிசனை உள்ளவராயிருக்கிறார்!

அத்தியாயம் - 3

நான் துயரமடையும்போது இயேசு என்னை விசாரிக்கிறவராயிருக்கிறாரா?

என்னுடைய வழிகள் இருளும் அந்தகாரமுமாகி, என்னவென்று சொல்ல முடியாத பயமும் திகிலும் என்னைப் பிடித்து நான் சோகமடையும்போது, இயேசு என்மேல் கரிசனையுள்ளவராயிருக்கிறாரா?

பகல் நேரத்து வெளிச்சம் இரவின் அந்தகாரமாக மாறும்போது என்னருகில் இருந்து என்னைக் காக்க இயேசு பரிதபிக்கிறாரா?

நீங்கள் எப்பொழுதுதாவது கவலைப்பட்டதுண்டா? நாம் எல்லோருமே கவலை கொள்கிறவர்களாக இருக்கிறோம்.

கவலைப்படுதல் ஒரு பாவமாகும். ஆனால், ஏற்றுக்கொள்ளக்கூடியதாகத் தோன்றும் பாவங்களில் இதுவும் ஒன்று. அது எப்படிப்பட்டதென்று நமக்குத் தெரியும். அது ஒரு பாவம் என்றும் நமக்குத் தெரியும். ஆனால் நாம் எல்லாரும் அதில் கொஞ்சம் ஏற்றுக்கொள்கிறோம். "கவலைப்படுதல்" என்பது மனித இயல்பு. நம்மில் பலர் பரலோகம் சென்று சேரும்வரை கவலைப்படுவதை நிறுத்தப் போவதில்லை. கவலை எங்கும் காணப்படுகிறது. இது ஒரு சர்வதேசப் பிரச்சனை!

நாம் எவற்றிற்காகவெல்லாம் கவலைப்படுகிறோம்? எல்லாவற்றுக்காகவும்! அவற்றுக்குப் பெயர் கொடுத்துப் பாருங்கள். நாம் நம்முடைய பிள்ளைகளுக்காக கவலைப்படுகிறோம். நம்முடைய தேவைகளை எப்படிச் சந்திப்பது என்று கவலைப்படுகிறோம். நாம் நம்முடைய வேலையை இழந்துவிட்டால் அதற்காகக் கவலைப்படுகிறோம். நாம் நம்முடைய மாமனார், மாமியார் மனம் புண்படும்படி நடந்திருந்தால் அதற்காகக் கவலைப்படுகிறோம். நாம் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது கவலைப்படுகிறோம். நாம் நம்முடைய பிள்ளைகள் பற்றிக் கொண்டிருக்கிற கெட்ட நண்பர்களைக் குறித்துக் கவலைப்படுகிறோம். நம்முடைய வாழ்வில் எடுக்கப்படும் ஒரு முக்கிய தீர்மானம் குறித்துக் கவலைக்கொள்கிறோம். நம்முடைய தேசத்தின் கடன்களைக் குறித்தும் கவலைப்படுகிறோம். உலகப்பிரச்சனைகள் குறித்தும்

கவலைப்படுகிறோம். நமது வயது முதிர்ந்த பெற்றோரைக் கவனிப்பது குறித்துக் கவலைப்படுகிறோம். இவற்றைக் குறித்து நினைக்கும் போதெல்லாம் நாம் கவலைப்படுகிறோம்.

வேசித்தனம், கொலை போன்ற பாவங்களினால் உண்டாகும் விளைவு களைப்போல கவலைப்படுவதனால் உண்டாகும் விளைவுகள் அவ்வளவு கடுமையாக இராது. ஆனால் பாவம் பாவம்தான். பாவத் திற்குப் பலன்கள் உண்டு. கவலைப்படுபவருக்கு ஏற்படும் மாபெரும் விளைவு இரவும் பகலும் நிம்மதியில்லாமல் பயத்தில் வாழ்வதேயாகும்.

பயமும் கவலையும் பயங்கரமானவை. ஆடம் ராபின்சன் என்பவர் "உறுதியான பாறை கட்டிடக் கம்பெனி" என்னும் புத்தகத்தில் ஒரு பயனுள்ள கதையைக் கூறியுள்ளார் (The Solid Rock construction company) . "மரணம்" என்பவன் ஒருநாள் காலையில் ஒருநகரத்தின் வழியாய் நடந்து சென்று கொண்டிருந்தான். ஒரு மனிதன் அவனை நிறுத்தி, "நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு மரணம் "நான் இந்த நகரத்துக்குள் சென்று பத்தாயிரம் பேரின் உயிரைப் பலிவாங்கப்போகிறேன்" என்றான். அதற்கு அந்த மனிதன், "இது மகா பயங்கரம், பத்தாயிரம் பேரின் உயிரைப் பறிப்பது கொடுமை" என்றான். அதற்கு மரணம், இதோ பார்; நீ என் பின்னாகப் போய்த் தொலை. நான் இன்று 10000 பேரின் உயிரை எடுத்தாக வேண்டும். அவர்களுடைய காலம் முடிந்துவிட்டது. இப்போது அவர்கள் உயிரை எடுக்க வேண்டியது என்னுடைய வேலை" என்றான். பின்னர் அன்று மாலை யில் மரணம் அந்த நகரத்தைவிட்டு வெளியே வந்துகொண்டிருந் தான். அப்போதும் அந்த மனிதன் மரணத்தைச் சந்தித்தான். அவன் கோபத்துடன், "இன்று காலையில் நீ பத்தாயிரம்பேரின் உயிரை எடுக்கப்போவதாகக் கூறினாய். ஆனால் இன்று 70,000 பேர் இறந்துவிட்டார்களே" என்று கேட்டான். அதற்கு மரணம், "நான் 10,000 பேரைத்தான் எடுத்தேன். மீதிப்பேர் பயத்தினாலும், கவலையினாலும் மாண்டார்கள். அதற்கு நான் பொறுப்பல்ல" என்றான்.

சில காரியங்களைக் குறித்து அதிகமாக கவலைப்பட்டு சில நேரங்களில் பயப்படுகிறோம். அவைகளை நாம் பெயரிட முடியாது. அவை வடிவமில்லாததும் கணக்கிட முடியாததுமாக இருக்கும். ஆனால்

அவை மாறாத இருளாய் நம் தலையின்மேல் சூழ்ந்திருக்கும். நம்மை இயல்பான செயல்கள் எதையும் செய்யவிடாமல் மிகுந்த வேதனையையும், பயத்தையும் கொடுத்துக்கொண்டிருக்கும். ஏதோ மோசமான ஒன்று நமக்கு நடக்கப்போகிறது என்று நினைப்போம். ஆனால் அது என்ன என்று தெரியாது. ஏதோ இனம்புரியாத பயத்தால் பீடிக்கப்பட்டவர்களைப் போல காணப்படுவோம். இவ்வாறான சூழ்நிலையில் இயேசு நம்மேல் கரிசனையுள்ளவராக இருக்கிறாரா?.

ஜெபம் தரும் ஆறுதல்

நீங்கள் கவலைப்பட்டு, பயப்பட்டு உங்களை வேதனைப்படுத்தும் கவலைமீது உங்களால் எதுவும் செய்யமுடியாமல் இருக்கும்போது இயேசு உங்களுக்காகக் கவலைப்படுகிறாரா? இதற்கு விடைகூறும் சங்கீதம் ஒன்று உள்ளது. அதுதான் சங்கீதம் 102. அது இப்படி ஆரம்பிக்கிறது: "**கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்; என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக**". இந்தச் சங்கீதத்தில் "**கவலை**" என்னும் உங்கள் பிரச்சனைக்குத் தீர்வுகள் உண்டு. நாம் அவற்றைப் பார்ப்போம்.

இந்தச் சங்கீதத்தை எழுதியவர், "ஆண்டவரே, என் கவலைகளைக் கவனியும்" என்று அவரை அழைக்கிறார். "கர்த்தாவே என் விண்ணப்பத்தைக் கேளும்" என்னும் அவரது கோரிக்கை உண்மையானது, மென்மையானது. இக்கட்டான ஒரு தேவையில் இருக்கும்போது, நீங்கள் பயந்து நடுங்குவதைவிட ஆண்டவரிடம் வேண்டுதல் செய்வது அவசியம். ஆனால் நீங்கள் ஜெபிக்கும்போது ஆண்டவர் அதைக் கேட்பார் என்று பூரணமாக நம்ப வேண்டும். இது மிகவும் முக்கியம். சங்கீதக்காரர்களுக்கு ஆண்டவரிடம் கூக்குரலிட்டு வேண்டுவதும், எங்கள் விண்ணப்பத்தைக் கவனியும் என்று கேட்பதும் அவர்களது வழக்கமாக இருந்தது. சங்.27:7 இல் தாவீது, "**கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு, எனக்கு இரங்கி, எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்**"என்கிறார். இங்கேயும் **கேளும்; இரக்கங்கொள்ளும்; உத்தரவு அருளிச்செய்யும்** என்கிறார்.

சங்கீதம் 39:12 இல், "**கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேட்டு, என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும்; என் கண்ணீருக்கு மவுனமாயிராதேயும்**" என்கிறார். இங்கேயும் அவருடைய விண்ணப்பத்தைக் கவனியுங்கள்: **கேளும்; செவிகொடும்; உத்தரவு தாரும்** என்கிறார்.

சங்கீதம் 55:1,2 ஆகிய வசனங்களில் கூறுவதென்ன? "**தேவனே,**

என் ஜெபத்தைக் கேட்டருளும்; என் விண்ணப்பத்திற்கு மறைந்திராதேயும். எனக்குச் செவிகொடுத்து, உத்தரவு அருளிச்செய்யும்". சங்கீதம் முழுவதிலும் இதே குரல்கள் எதிரொலிப்பதைக் காண்கிறோம். **"கர்த்தாவே, கேளும்; செவிகொடும்; உத்தரவு அருளும்".**

இந்தச் சங்கீதங்களை எழுதியவர்கள் கஷ்டத்தையும் துன்பத்தையும் அனுபவித்துக் கவலைகொள்பவர்களாகவும், பயப்படுகிறவர்களாகவும் இருந்தார்கள் என்பது தெளிவு. அவர்கள் முக்கியமாக, தங்கள் குடும்பத்தைப் பாதிக்கும் காரியங்களுக்காகவே கவலைப்பட்டார்கள். இந்தக் கவலைகள், பயங்கள் மத்தியிலும் தாவீதும், மற்ற சங்கீதக்காரர்களும் செய்த காரியம் என்னவெனில், அவர்கள் ஆண்டவரிடம் சென்று தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தார்கள். அவர்கள் **"ஆண்டவரே, கேளும்"** என்று கதறினார்கள். நீங்கள் கவலையுடனும், பயத்துடனும் தனியாக இருக்கும்போது, சங்கீதக்காரர்கள் செய்த காரியத்தைச் செய்யுங்கள். ஆண்டவரை நினையுங்கள், அவரிடம் சொல்லுங்கள், அவரிடம் விண்ணப்பியுங்கள், அவர் உங்கள் ஜெபத்துக்குச் செவிகொடுத்துப் பதிலளிப்பார் என்று நம்புங்கள். தேவன் சிங்காசனத்தில் இருக்கும்போது உங்கள் விண்ணப்பம் அவரிடம் சென்று சேர்ந்தால் உங்களுக்கு விடுதலையும், சமாதானமும், ஆறுதலும் அவரிடமிருந்து உங்களுக்கு வந்துகொண்டிருக்கிறதென்று அறியுங்கள்.

வயது முதிர்ந்தவர்களின் மேலும் இயேசு கரிசனையுள்ளவராயிருக்கிறார்!

ஒருவேளை நீங்கள் வாழ்க்கை என்னும் மலையின் மறுபக்கத்தில் மெதுவாக இறங்கிக்கொண்டிருக்கலாம். அதாவது முதியவர்களாக 70 அல்லது 80 வயதானவர்களாக இருக்கலாம். உங்கள் வாழ்க்கையில் வருடங்கள் வந்தன. மாயமாக மறைந்துவிட்டன. உங்கள் ஆயுளில் இன்னும் எத்தனை நாட்கள் உங்களுக்கு உண்டு என்று உங்களுக்குத் தெரியாது. இதைக்குறித்து உங்களுக்குச் சிறிது கவலையும் உண்டு. இப்பொழுதும் இயேசு உங்களையும் விசாரிக்கிறவராயிருக்கிறாரா? ஆம். அவர் உண்மையாகவே உங்களையும் விசாரிக்கிறவராயிருக்கிறார். உங்களிடம் இருக்கும் இப்போதைய கவலையைப் போக்க வேதவசனங்கள் உங்களுக்கு உதவிசெய்வதாக!

102ஆம் சங்கீதத்தை வாசிக்கும்போது அதை எழுதிய சங்கீதக்காரன் பலவீனமானவனாகவும், துயரம் நிறைந்தவனாகவும் இருந்ததை உணர முடிகிறது. சங்.102:3ஆம் வசனத்தில் அவர் கூறுவதைக்

கவனியுங்கள். "என் நாட்கள் புகையைப்போல் ஒழிந்தது; என் எலும்புகள் ஒரு கொள்ளியைப்போல் எரியுண்டது". தாவீது கவலையடைந்திருந் தான். அவனுக்கு வாழ்க்கை அலுத்துப்போயிற்று. அவனுடைய நாட்கள் புகையைப்போல் ஒழிந்து மறைந்துவிட்டதாக நினைத்தான். வாழ்ந்து முடிக்கப்பட்டதாக நினைக்கவில்லை. ஒரு புழு இலையை அரித்துத் தின்றுவிடுவதுபோல, அவனுடைய வாழ்நாட்கள் ஒழிந்து போனதாக நினைத்தான். தன்னுடைய வாழ்நாட்களைக் குறித்த கவலை தாவீதுக்கு மிக அதிகமாக இருந்தது. எனவேதான் தனக்கு மீதியாக உள்ள நாட்களும், புகையைப்போல ஒழிந்துவிடும் என்று கூறுகிறான். அவன் முதிர்ச்சியடைந்து எலும்பும் தோலுமாயிருக்கிறான். எரிந்து அணைந்துபோன அடுப்பின் அக்கினித்தழல் போல இருக்கிறான்.

முதியோராகிய உங்கள் நிலையும் தாவீதின் நிலைக்கு ஒத்திருக்கலாம். உங்களுடைய வாழ்க்கையின் பொன்னான வருடங் களாகிய 80 அல்லது 90 வயதை அடைந்திருக்கலாம். உங்களுடைய வாழ்க்கையிலும் வருடங்கள் புகையைப் போல் ஒழிந்துவிட்டதாகத் தோன்றலாம். உங்களுடைய உடல் ஒரு எரியும் அக்கினித்தழல் போல் காணப்படும். இப்பொழுது நீங்கள் உங்கள் இளமைக் காலத்தில் செய்த காரியங்களைச் செய்யமுடியாது. இந்த வயதில் நீங்கள் எதைச் செய்தாலும் அது உங்கள் சரீரத்தைப் பாதிக்கும். சரீரம் பாதிப்படைய வில்லையானால், அது வேலை செய்யவில்லை என்று தெரிந்து கொள்ளலாம்.

உங்களால் இனிமேல் ஓட முடியாது, தோட்டத்தில் வேலை செய்யமுடியாது, கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கிவர முடியாது, கார் ஓட்டமுடியாது. தற்போது நீங்கள் யாரோ ஒருவரின் துணையை யும், உதவியையும் சார்ந்திருக்கிறீர்கள். இப்பொழுது இயேசு உங்களுக் காகக் கவலைப்படுகிறாரா?

நல்லது! இந்தக் காரியங்களுக்காக எல்லாம் நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், அது உங்கள் வயது முதிர்ச்சியைக் காட்டிவிடும். நான் உங்களுக்குக் கூற ஒரு நற்செய்தி உண்டு. முதிர்வயதைக் குறித்துக் கவலைப்படும் முதல் ஆள் நீங்கள் அல்ல. கடைசி ஆளும் நீங்கள் அல்ல. சங்கீதக்காரனுக்கு என்ன செய்யவேண்டும் என்று தெரிந்திருந்தது. அதுபோலச் செய்ய உங்களாலும் முடியும். நீங்கள் உங்கள் கவலைகளையும், துக்கங்களையும், ஜெபத்தின்மூலம் கர்த்தரிடம் சமர்ப்பிக்கவேண்டும். இன்று அவர் தம்மை உங்களுக்கு

உண்மையுள்ளவராகக் காட்டும்படி வேண்டுங்கள். உங்கள் ஜெப அறையில் நீங்கள் அவரோடு பேசுங்கள். அவருடைய வார்த்தைகளை வேதாகமத்தில் வாசியுங்கள். இதை உங்களால் செய்ய முடியாவிட்டால் உங்கள் சபையிலிருந்து யாராவது ஒருவர் உங்களிடம் வந்து உங்களுக் காக வேதவசனங்களை வாசித்துக் காட்டட்டும். உங்கள் முதுமை நீங்கள் ஆண்டவரோடு தொடர்பு கொள்ளுவதற்குத் தடையாக இருக்க வேண்டாம். ஒருவேளை இது ஒரு மாபெரும் நன்மையாக உங்களுக்கு இருக்கலாம். நீங்கள் ஓடியாடி வேலைசெய்யவும், அங்குமிங்கும் சஞ்சரிக்கவும் முடியாமல் ஒரு இடத்தில் முதுமை காரணமாக இருப்பதால், உங்களுக்கு ஆண்டவரோடு உள்ள தொடர்பு அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

இந்த வயோதிப காலத்திலும் இயேசு உங்கள்மேல் கரிசனை உள்ளவராயிருக்கிறார். இப்பொழுது உங்களால் காலையில் விழித்தெழ முடிவதில்லை. எரிந்து அவிந்துபோன அக்கினித் தழலைப்போலத் தேய்வடைந்த எலும்புகளும், சுருங்கிய தசைகளும், தோலும், உங்களைச் சுறுசுறுப்பாக இயங்க அனுமதிப்பதில்லை. இத்தகைய பலவீனமான சூழ்நிலையில் உங்களுக்கு ஆண்டவருடைய சமுகம், ஆறுதல், பலன் ஆகியவை அதிகம் தேவை.

எனவே அன்பானவர்களே, நீங்கள் எவ்வளவுக்கு அதிகமாக அவரைத் தேடுகிறீர்களோ, அவ்வளவுக்கு அதிகம் அவர் உங்களைத் தாங்குவார். சூரியன் அஸ்தமனமாகி, பகல் வெளிச்சம் மங்கி, நிழல்கள் நீளமாக தோன்றும் அந்தகார வேளையிலும் அவர் உங்கள் அருகில் இருக்கிறாரா? ஆம், இயேசு உங்கள் அருகில் இருக்கிறார் என்றும், அவர் உங்களை விசாரிக்கிறார் என்றும், உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார் என்றும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.

இயேசு பலவீனமானவர்களுக்காக பரிதபிக்கிறார்!

சங்கீதம் 102:4ஆம் வசனம் ஒரு மனிதன் தன் முதிர்வயதில், பலவீன மாயிருப்பதைக் காட்டுகிறது. "**என் இருதயம் புல்லைப்போல் வெட்டுண்டு உலர்ந்தது; என் போஜனத்தைப் புசிக்க மறந்தேன்**". சங்கீதக்காரனின் இருதயம் பலவீனமாயிருந்தது. ஆரோக்கியமான, சுறுசுறுப்பான அவருடைய வாலிபகாலத்தின் இருதயம் இப்பொழுது சோர்ந்து, தளர்ந்து போயிருக்கிறது. தளர்ந்துபோன தசையைப்போலவும், சுருங்கிய தோலைப்போலவும் உள்ளது. உலர்ந்து, காய்ந்து, மாயும் நிலையில் இருக்கும் புல்லைப்போல இருந்தது. அவருடைய பலம்

எல்லாம் ஓய்ந்து போய், அவரது அழகும் இப்பொழுது மறைந்துவிட்டது. அவருடைய இளமைத் துடிப்பு, அழகிய தோற்றம், மிடுக்கு, சுறுசுறுப்பு ஆகிய அனைத்தும் மறைந்துவிட்டன. அவருடைய வாழ்க்கையின் சிறந்த நாட்கள் அவரது இளமை பருவமான வாலிபநாட்களே!

ஆனால் இப்பொழுது அவருடைய இருதயம் சோர்வடையத் தொடங்கிவிட்டது. அவருடைய நினைவுகள் மழுங்கிவிட்டது. அவர் கூனி குறுகிக் களைப்படைந்துவிட்டார். அவரது தோலில் சுருக்கங்கள் உண்டாகி, உடல் சுருங்கி, எலும்புகள் தள்ளாடி, மிகவும் பலவீன நிலையை அடைந்துவிட்டார். அவருடைய ஞாபகசக்திக் குறைவினால் அவர் பல இக்கட்டுகளுக்கும் ஆளாகினார். அவருக்குப் பசி இல்லை. எனவே போஜனம் பண்ணுவதில்லை. சாப்பிடவேண்டும், வாழவேண்டும் என்னும் எண்ணம் முற்றிலும் அற்றுப்போயிற்று.

இவ்வாறு முதிர்வயதை அடைந்து, சோர்ந்து, சுருங்கி வாடிப்போகும் எவரையாவது வாழ்க்கையில் நீங்கள் சந்தித்ததுண்டா? இந்த அடையாளங்கள் யாவும் நீங்கள் அறிந்த ஒருவரிடம் உள்ளனவா? ஆம், இந்த அடையாளங்களெல்லாம் அவருடையவைகளே. இப்படிப் பட்டவர்களுக்கு உணவு சக்கரவண்டிகளில் கொண்டுபோய்க் கொடுக்கப்பட வேண்டும். கைகளின் நடுக்கத்தினாலும், விரல்களின் நடுக்கத்தினாலும் சிலருக்குத் தானாகவே எடுத்துச் சாப்பிடவும் முடியாமலிருக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கு மற்றவர்கள் அருகில் இருந்து அன்புடனும், பரிவுடனும் பிசைந்து ஊட்டிவிட வேண்டும். நீங்கள் சுகத்துடனும், மனத்தெளிவுடனும் இருக்கும்போது, என்னை விசாரிப்பவர்கள் யாராவது உண்டா என்று நினைப்பீர்கள். என்னுடைய பிள்ளைகள் இன்னும் என்னை நேசிக்கிறார்களா? இவ்வாறான வயோதிப நிலையிலிருக்கும் என்னையும் இயேசு நேசிக்கிறாரா என்று நீங்கள் சிந்திக்கத் தொடங்குவீர்கள். இதேவிதமான சிந்தனைகள் 102ஆம் சங்கீதத்தைப் பாடிய சங்கீதக்காரனின் உள்ளத்திலும் எழுந்தன என்பதை நினைவுகூருங்கள். தன்னுடைய கடைசிக் காலத்தில் அவனும் "என்னை யாராவது விசாரிக்க மாட்டார்களா?" என்று கேட்டான். அவன் பலவாறாக எண்ணிக் கவலைப்பட்டு, மனம் வருந்தினான். நீங்கள் அவ்வாறு செய்ததுண்டா?

5ஆம் வசனம் இதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது: "என் பெருமூச்சின் சத்தத்தினால், என் எலும்புகள் என் மாம்சத்தோடு ஒட்டிக் கொள்கிறது". இது எவ்வளவு பரிதாபமான நிலை! ஆனால் இது கவிதை

நயமுள்ளதாகவும் உள்ளது. இவருடைய வாழ்க்கையில் அமைதியின் குரல் இப்பொழுது துக்கத்தின் குரலாகவும், முறுமுறுப்பின் குரலாகவும் மாறிவிட்டது. ஒருகாலத்தில் சங்கீதக்காரன் தன் துக்கங்களைப் பொறுமையோடே சகித்தார். ஆனால் இப்பொழுது அப்படிப் பொறுமை யோடே சகிக்க முடியவில்லை. இப்பொழுது அவருடைய வேதனை களும் துன்பங்களும் மிகவும் அதிகமாகிவிட்டபடியால் அவரால் முறுமுறுக்காமல் இருக்க முடியவில்லை.

"நான் கூறுவதைக் கேட்பவர்கள் யாராவது உண்டா?" என்று சங்கீதக் காரன் கேட்கிறார். பலவீனம், இயலாமை, ஒடுக்கம், சஞ்சலம், போஜனம் பண்ண இயலாத நிலை ஆகிய சூழ்நிலைகளில் தனக்காகக் கவலைப் படுபவர்கள் யாராவது உண்டா எனக் கேட்கிறார்.

இந்த ஏழை மனிதன் கூறுகிறார்: **"என் எலும்புகள் என் தோலோடு ஒட்டிக்கொண்டது"**. ஆம், இப்பொழுது அவருடைய சரீரத்தில் எலும்பும், தோலும்மட்டுமே மிஞ்சியிருக்கிறது. இவருடைய தோலின் உட்பாகத் தில் கொழுப்புப்படலம் இருந்தது, குளிர்காலத்தில் இவரது சரீரத்தை அது வெப்பமாகக் காத்துக்கொண்டது. இப்பொழுது அது இல்லாததால் முதிர்வயதில் குளிரைத் தாங்க முடியாதவராய் இருந்தார். அவருடைய தோற்றம் உலர்ந்து, வாடி எரிக்கப்பட்டுப் போனதுபோல் காணப்பட்டது. அவருடைய வாழ்வில் மரணம் அருகில் வந்து பயமுறுத்துவதுபோல் தோன்றியது.

இது எதைப் போன்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையின் மிகவும் கடினமான போராட்டத்தைப் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். உயிர் வாழ்வதற்காகவே நீங்கள் போராடு கிறீர்கள். இந்தப் போராட்டத்தை நான் தனியாகத்தான் போராட வேண்டுமா? எனக்கு யாரும் துணை கிடையாதா? என்று கேட்கிறீர்கள். இயேசு உங்களுக்கு துணை நிற்கிறாரா என அறிய விரும்புகிறீர்கள். அவர் இன்னும் உங்கள் வாழ்க்கையில் உங்களுடன் நடந்து வருகிறாரா? நீங்கள் இளமையோடு இருந்தபோது உங்களுடன் அவர் வந்தார். பலவீனத்தோடு தள்ளாடும் இவ்வேளையில் அவர் உங்களைக் கைவிட்டு விட்டாரா? இயேசு இப்போது உண்மையிலேயே உங்களுக்காகக் கவலைப்படுகிறாரா?

இது ஒரு உண்மையான, முக்கியமான கேள்வி. உங்கள் பலவீன மான நிலையில் எல்லோரும் உங்களைக் கைவிட்டது போல் தோன்றும் வேளையிலும் நீங்கள் அறிய வேண்டியது, **"ஆம், இயேசு உங்களை**

விசாரிக்கிறவராயிருக்கிறார்" என்பதே. இயேசு உங்களுக்காக உங்கள் அருகில் இருக்கிறார். உங்கள் வாழ்க்கையின் அந்தகாரமான நெருக்கடி வேளைகளில் உங்கள் கரங்களைப் பிடித்து வழிநடத்த இயேசு உங்களருகில் இருக்கிறார். உங்கள் வாழ்க்கையின் இறுதிநாட்களில் இயேசு உங்களுக்குத் துணையாக உங்களோடு இருக்கிறார். இளமையில் அவர் உங்களை வழிநடத்தினதுபோல இந்த முதுமையிலும் வழிநடத்துவார். இயேசு உங்கள்மேல் கரிசனையுள்ளவர். ஆகையால் உங்களுடன் இருக்கிறார். உங்களுடைய இறுதிக்காலம் வரையிலும் அவருடைய கவனமும் பாதுகாப்பும் உங்களுக்கு இருக்கும்.

நீங்கள் பலவீனமடைந்து, சோர்ந்திருக்கும் வேளையிலும் இயேசு உங்களை விசாரிக்கிறவராயிருக்கிறார்.

தனிமையாய் இருப்பவர்கள்மேல் இயேசு கரிசனையுள்ளவராயிருக்கிறார்

நீங்கள் சுகவீனமாகவோ, பலவீனமாகவோ இல்லாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் தனிமையான வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஒரு தனி வீட்டிலோ அல்லது கூட்டுக் குடியிருப்பின் ஒரு பகுதியிலோ தனிமையாக வாழ்ந்து கொண்டிருக்கலாம். வேறு எவரும் உங்களுடன் இல்லை. அந்தத் தெருவில் இருப்பவர்களையோ, குடியிருப்பில் இருப்பவர்களையோ, அயல் வீட்டுக்காரர்களையோ உங்களுக்குத் தெரியாது. ஒருவரும் உங்களிடம் வருவதுமில்லை. வெளியே இருட்டாயிருக்கிறது. பாதையில் பயங்கரமாயிருக்கிறது. உங்கள் வீட்டின் கதவில் 2,3 அல்லது 4 பூட்டுக்கள் போட்டிருக்கலாம். ஒருவரும் இதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. எவரும், எதற்காகவும் உங்களிடம் வந்ததும் இல்லை. ஒருவரும் உங்களிடம் வந்து பேசி எவ்வாறு தனிமை வாழ்க்கை நடத்துகிறீர்கள் என்று கேட்டதும் இல்லை. உங்கள் தொலைபேசி ஒலித்தால், நீங்கள் அதை எடுக்கப் பயப்படுகிறீர்கள்.

உங்களுக்கும் சில நண்பர்கள் உண்டு. ஆனால் நீங்கள் அவர்களை அடிக்கடி சந்திப்பதில்லை. வாரம் ஒருமுறை அவர்களை ஆலயத்தில் சந்திப்பீர்கள். அவர்களில் ஒருவரும் ஒருபோதும் உங்களைப் பார்க்க வந்ததில்லை. இது உங்களுக்கு ஒரு சோர்வை உண்டாக்கும். எனக்காக எவராவது கவலைப்படுகிறார்களா என்று நீங்கள் நினைப்பீர்கள். மாலை மயங்கி, இரவு வரும்போது உங்களுடன் பேச எவரும் இல்லாத வேளையில் தனிமை உங்களை வாட்டுகிறது. இந்த வாழ்க்கையினால்

பயன் என்ன? இப்படி ஒரு வாழ்க்கை வாழவேண்டுமா என்று நினைக்கிறீர்கள். நீங்கள் தனிமையில் வாழ்வதால் நீங்கள் மறைந்து விட்டாலும் உங்கள் இழப்பை உணர ஒருவரும் இருக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் வாழும் உங்கள்மேல் இயேசு கரிசனையுள்ள வராயிருக்கிறாரா?.

உங்களைப்போலத் தனிமையை அனுபவித்த சங்கீதக்காரன், "வனாந்தர நாரைக்கு ஒப்பானேன்; பாழான இடங்களில் தங்கும் ஆந்தை யைப் போலானேன். நான் நித்திரையில்லாமல் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப்போல் இருக்கிறேன்" (சங்.102:6,7) என்று கூறுகிறார்.

இங்கு நாரை என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் எபிரேயச் சொல்லுக்கு "வாந்தி பண்ணுதல்" என்று பொருள். நாரை தன் வாயிலி ருக்கும் உணவைத் தன் குஞ்சுகளின் வாயினுள் ஆழமாகச் செல்லும் படி வாந்தி பண்ணிப்போடும் பழக்கம் உள்ளது. இது தனிமையான இடங்களில் நீண்டகாலமாகத் தங்கும். இது ஒரு சோகமான பறவை. இங்கு தனிமையையும் வெறுமையையும் குறிக்கும் வகையில் நாரை ஒரு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. அந்தப் பறவையைப் போலா னேன் என்று சங்கீதக்காரன் கூறுவதன் காரணம் இதுவே: "என்னைப் பார்க்க ஒருவரும், ஒருபோதும் வருவதில்லை. நான் இங்கே தனிமை யாகவே வாழ்ந்துகொண்டிருக்கிறேன்". நான் பாழான இடங்களில் குடியிருக்கும் ஆந்தையைப் போல இருக்கிறேன். ஆந்தை அந்தகார இருளில், தனிமையில் சோகத்துடன் நீண்ட காலம் வாழக்கூடியது. எல்லோராலும் புரிந்துகொள்ளக்கூடிய சோகம், கைவிடப்பட்டதன்மை என்பவற்றை மட்டும் சங்கீதக்காரன் எடுத்துக்கூறுகிறார்.

அதுமாத்திரமல்ல, "இரவில் எனக்குத் தூக்கம் வருவதில்லை, நான் விழித்துக் கொண்டே இருக்கிறேன்" என்று கூறுவதைப் பார்க்கிறோம். நீங்கள் எப்போதாவது தூக்கம் வராமல் இரவில் விழித்துக் கொண்டி ருந்ததுண்டா? உங்களுக்கு என்ன நடக்குமோ என்னும் கவலை உங்களுக்கு தூக்கம் வரவிடாமல் செய்திருக்கலாம். உங்கள் வேதனை அளவுக்கடந்தது. உங்கள் தனிமை பொறுக்க முடியாதது. உங்களிடம் எவரும் வருவதில்லை. உங்கள்மீது உண்மையாகவே எவராவது அக்கறையுள்ளவர்களாக இருக்கிறார்களா?

இன்னும் சங்கீதக்காரன் தன்னைக்குறித்து புலம்புவதைப் பாருங்கள்: **"நான் நித்திரையில்லாமல் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப் போல இருக்கிறேன்"(சங்.102:7).** நான் தூர இடத்தில் தனிமையாயிருக்கிறேன்.

சமுதாயமாகக் கூடி வாழும் மக்களிடமிருந்து நான் தூர விலகியிருக்கிறேன். என்னை யாரும் அண்டி வரமுடியாது. நான் நானே தனிமையாக இங்கு வாழ்கிறேன். இங்கே என்னுடன் யாரும் இல்லை. எவரும் என்னிடம் வருவதும் இல்லை.

இப்பொழுது, இச்செய்தியை நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கலாம். நீங்கள் உடனே ஆச்சரியத்துடன், 'இந்த வார்த்தைகள் என் அனுபவத்திலிருந்து நான் எழுதியவைப்போல் இருக்கிறதே. இந்த வார்த்தைகள் என்னைக் குறித்தே எழுதப்பட்டுள்ளன. இங்கே, இதோ, நான் தனிமையில் இருக்கிறேன். தனிமையாக எனது வியாதிப்படுக்கையில் படுத்திருக்கிறேன். நான் என் வாழ்வின் இறுதிநாட்களை வியாதியினால் ஆஸ்பத்திரியில் படுத்திருந்து செலவழிக்கிறேன். எவரும் என்னுடன் இல்லை. நான் தனிமையாகத் தனிமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனது கடிதத்தை சங்கீதக்காரன் வாசிப்பதுபோல் இருக்கிறதே என்று நீங்கள் எண்ணக்கூடும்.

ஒவ்வொருநாளும் நீங்கள் உங்கள் வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறீர்கள். நீங்கள் உண்ணும் எளிய உணவு போஷாக்காகிறது. எனவே உங்கள் சரீரம் மெலிந்து, எலும்பும் தோலுமாக இருக்கிறீர்கள். நெருப்பிலிருந்து புகை தோன்றி மறைவதுபோல உங்கள் வாழ்க்கையின் நாட்கள் தோன்றி மறைந்து கொண்டிருக்கின்றன.

உங்களால் சாப்பிட முடியவில்லை. உங்கள் பசி உணர்ச்சி மறைந்து விட்டது. உங்களால் இனிமேல் தனிமையில் துக்கப்படவும் முடியாது.

நீங்கள் கத்துகிறீர்கள், கூப்பிடுகிறீர்கள் ஏன் என்று கேட்க எவரும் இல்லை. உங்களைப் பார்க்க ஒருவரும் வருவதில்லை. உங்களுக்காக எவரும் கவலைப்படுவதும் இல்லை. இதே அனுபவங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருந்தால், கீழ்க்கண்ட வசனங்களை வாசியுங்கள்:

"என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்துக்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்" (சங்.42:11).

"பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார்; இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயிலிருக்கிறது; என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண்ணப்பஞ்செய்கிறேன்" (சங்.42:8).

இந்த வசனங்கள் தாவீது தனிமையாயிருந்தபோது தேவனிடம் ஏறெடுத்தவையாகும். உங்கள் அனுபவமே அவரது அனுபவமாகவும் இருந்தது. தாவீது அதிகமாகக் கவலையடைந்தார். ஆனால் அவருக்கு

முழு நம்பிக்கை இருந்தது. அவருடைய நம்பிக்கை என்ன? என்று நீங்கள் கேட்கலாம். எனக்கன்பான சிநேகிதனே, உன்னுடைய நம்பிக்கை எதுவோ அதுவே அவருடைய நம்பிக்கையும் ஆகும். அதுவே என்னுடைய நம்பிக்கையும் ஆகும்.

அந்த நம்பிக்கை என்ன? சங்கீதக்காரனாகிய தாவீதைச் சந்தோஷப் படுத்தி, ஆறுதல் அளித்தது எது? இரவில் அவர் தனிமையாயிருந்த போது அவருக்கிருந்த நம்பிக்கை எது? அது இதுதான்:

தேவன் அவனுக்காக அங்கே இருந்தார். தேவன் அவரைக்குறித்துக் கவலைப்பட்டார். தேவன் அவனை நேசித்தார். உண்மையில், தேவன் அவன் மீது அன்புகூர்ந்து, அவன்மேல் கரிசனையுள்ளவராக இருந்ததால், தாவீது செய்ய வேண்டியதெல்லாம் தேவனிடம் நேரடியாகப் பேசுவதேயாகும். தனக்கு மிகவும் அன்பான நேசரிடம் நேரடியாகப் பேசலாம். தன்னைப் பற்றிக்கொண்டிருக்கிற தேவனைத் தானும் பற்றிக்கொள்வதே தாவீதின் நம்பிக்கையாகும்.

இருளில் ஒளி

42ஆம் சங்கீதத்தை எழுதிய தாவீதினிடத்தில் கரிசனையாயிருந்த தேவன் 102 ஆம் சங்கீதத்தின் ஆக்கியோன் மீதும் கரிசனையுள்ளவராயிருந்தார். அதேமுறையில் உங்களுக்கும் உதவிச்செய்யும்படி அக்கறையுள்ளவராயிருக்கிறார்.

உங்கள் வழிகள் அந்தகாரமாயிருக்கும்போது, அவற்றை ஆண்டவரிடம் ஒப்படையுங்கள். கர்த்தர்பேரில் நம்பிக்கைவையுங்கள். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள். கர்த்தருடைய வேதத்தை வாசியுங்கள். எப்போதும் வெளிப்படையான ஜெபத்தின்மூலம் தேவனுடன் உண்மையுள்ளவர்களாயிருங்கள். நேரடியாக ஆண்டவரிடம் பேசுங்கள். உங்கள் நெருங்கிய நண்பனிடம் பேசுவதுபோல தேவனிடம் பேசுங்கள். உங்கள் பாதையில் நீதியான வெளிச்சத்தையும் வீசச்செய்வார். 37ஆம் சங்கீதத்தில் தேவன் தந்துள்ள வாக்குத்தத்தம் அதுவே.

நீங்கள் தனிமையில் இருக்கும்போது எவருமே உங்களைக் கண்டுகொள்வதில்லை என்று நினைக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையில் ஒருவிதமான பயம் நிறையும்போதும், பயத்திற்கான காரணத்தை நாம் அறிய முடியாத நிலையிலும் இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்:

இயேசு உங்களைக் விசாரிக்கிறவரானபடியால். உங்களுடைய இக்கட்டிலிருந்து உங்களை விடுவித்து, உங்கள் பயங்கள் யாவையும் போக்க அவரால் முடியும்.

வில்லியம் C. பூலே என்பவர் தனது பாடலில் இவ்வாறு கூறினார்:

"இயேசு எனக்குத் தேவையாயிருக்கும்போது, அவர் என்னருகில் இருக்கிறார்.
நான் தவறிடும்போதும், நான் பயப்படும் போதும்,
எனக்கு உதவி செய்யவும், என்னைச் சந்தோஷப்படுத்தவும்
அவர் எனக்கு அதிகம் தேவையாயிருக்கும்போது
ஆயத்தமாய் என்னருகில் இருக்கிறார்".

நீங்கள் தனிமையாயிருக்கும்போதும், உங்களுடைய வழி அந்தகாரமாக இருக்கும்போதும், பகல் வெளிச்சம் மங்கி, இரவின் இருள் சூழும்போதும், நீங்கள் செய்யவேண்டியதென்ன? தேவவார்த்தை என்ன கூறுகிறதோ, அதைச் செய்யுங்கள். இந்த நித்தியமான சத்தியத்தைப் பற்றிக்கொள்ளுங்கள்: 'இயேசு உங்களை விசாரிக்கிறவராயிருக்கிறார்'.

வில்லியம் R. மார்ஷல் தன்னுடைய அழகான சிறிய புத்தகமாகிய, "ஒரு சாண் அளவில் அடைக்கப்பட்ட நித்தியம்" என்பதில் ஒரு கதையைக் கூறுகிறார். ஒரு பெண் தன்னுடைய வீட்டில் கொள்ளைக்காரர்கள் புகுந்துவிடுவார்கள் என்ற பயத்தில் இரவில் தூங்க முடிவதில்லை. இப்படியே பத்து வருடங்களாகத் தூக்கமின்றித் தவித்தாள். ஒரு இரவில் அவளுடைய கணவன் வீட்டின் கீழ்த்தளத்திலிருந்து ஒரு சத்தம் வந்ததைக் கேட்டு, கீழே இறங்கிச் சென்றான். அங்கே ஒரு கொள்ளைக்காரனைக் கண்டான். அவனிடம், "நண்பரே, மாலை வணக்கம். உங்களைக் கண்டதில் எனக்குப் பெருமகிழ்ச்சி. நீங்கள் என்னுடைய மாடிக்கு வாருங்கள். அங்கிருக்கும் எனது மனைவியை நீங்கள் சந்திக்கவேண்டும். உங்களை அவள் பத்துவருடங்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்" என்றான்.

இது உண்மைதான். எப்போதுமே நடைபெறாத காரியங்களைக் குறித்து நாம் அடிக்கடி கவலைப்படுகிறோம். நான் அதை ஏன் செய்கிறேன் என்று எனக்குப் புரிகிறது. இதே நிலை தான் உங்களிடமும் இருக்கும் என்று நினைக்கிறேன். நாம் அவற்றைப் பற்றிக் கவலைப்படுவதால் இப்படிப் பயப்படுகிறோம். நம்மீது எவரும் கவலைப்படுவதில்லை என்னும் எண்ணத்தில் இப்படிச் செய்கிறோம். நம்மால் கட்டுப்படுத்த முடியாத எதற்காகவும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. உங்களுக்காக இயேசு அவற்றைக் கட்டுப்படுத்தட்டும். நீங்கள் கவலைப்படவேண்டிய எந்தக் காரியமும் இல்லை. ஏனெனில் இயேசு உங்களுக்காகக் கவலைப்படுகிறார்.

அவர் உண்மையாகவே உங்களுக்காகக் கவலைப்படுகிறார். உங்களால் புரிந்துகொள்ளமுடியாத அளவுக்கு அவர் உங்கள்மேல் அன்பு செலுத்துகிறார். வேறு எவரும் உங்களை நேசிப்பதைவிட ஆழமாக அவர் உங்களை நேசிக்கிறார். வேறு எவரும் உங்களுக்காகக் கவலைப் படுவதைவிட அதிகமாக அவர் உங்களுக்காகக் கவலைப்படுகிறார்.

ஒருவரும் உங்களுக்காக கவலைப்படுவதில்லை என்று நினைத்து நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பீர்களானால், இதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்: **ஆம், இயேசு உங்களை விசாரிக்கிறார்.**

அத்தியாயம் – 4

நான் வீழ்ச்சியடையும்போது இயேசு என்மேல் கரிசனையுள்ளவராய் இருக்கிறாரா?

நான் ஒரு பலமான சோதனையை எதிர்த்துத் தோல்வியடையும்போது, இயேசு எனக்காகக் கவலைப்படுகிறாரா?

இரவு முழுவதும் நான் கண்ணீர் வடித்து வேண்டுதல் செய்தபோதும், என்னுடைய ஆழமான வேதனைக்கு விடுதலை கிடைக்கவில்லையே?

ஒரு மனிதன், ஒரு படைத்தளபதியாக ஒரு போருக்குச் சென்றார். அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை. ஆனால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அத்துடன் அவரது இராணுவ சேவை முடிவடைந்தது!

பின்னர் அவர் கிராமப்புறத்தில் சிறு கடை ஒன்றை ஆரம்பித்தார். அதுவும் விரைவில் மூடப்பட்டுவிட்டது. தொழிற்துறையிலும் அவருக்குத் தோல்வியே!

பின்னர் ஒரு வழக்கறிஞராக இல்லிநாயிஸிலுள்ள ஸ்பிரிங் ஃபீல்டு என்னுமிடத்தில் தொழில் தொடங்கினார். இவர் நடைமுறைக்கு ஒவ்வாத வராய் இருந்தார். முரட்டுக்குணமுள்ளவரும், விரைவில் உணர்ச்சி வசப்படுகிறவருமாயிருந்தார். எனவே இந்தத் தொழிலும் அவருக்கு ஒத்துவரவில்லை. வக்கீல் தொழிலிலும் அவருக்கு தோல்வியே!

அரசியலில் இறங்கினார். மாநில சட்டசபைக்கு உறுப்பினராகும்படி போட்டியிட்டார். தோல்வி கண்டார். மாநில காங்கிரஸில் உறுப்பினராக முயற்சித்தார். தோல்வியடைந்தார். ஒரு அலுவலகத்தில் கமிஷனராக விண்ணப்பித்தார். தோல்வி கண்டார்!

1854இல் செனட் தேர்தலில் போட்டியிட்டார்; தோல்வியடைந்தார்.

1856இல் உதவி ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டார்; தோல்வி யடைந்தார்.

இறுதியாக 1860இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

அந்த மாமனிதர்தான் ஆபிரகாம் லிங்கன்!

இவ்வாறு அவர் கடந்த வந்த பாதையில் இவர் சந்தித்ததெல்லாம் தோல்விகளே! தோல்வியடைவதின் விளைவுகள் நம் அனைவருக்கும் தெரியும். உண்மையில் தோல்விகள் நம்முடைய வாழ்க்கையின் ஒரு பகுதியே. ஆனால் அது எந்தவகையிலும் எதையும் எளிதாக்கு வதில்லை. இல்லையா?

அரசியலிலோ ஒரு வேலையிலோ நாம் தோல்வியடைந்தால் அது எவ்வளவாய் நமக்கு வேதனையைத் தரும்.

நமது திருமண ஒப்பந்தத்தில் நாம் தோல்வியடைந்தால் அதை நம்மால் பொறுத்துக்கொள்ளவே முடியாது.

நாம் ஒரு நண்பனுக்கு இயேசுவைக் குறித்து சாட்சி கூறி, அவன் அவரை அறிந்து ஏற்றுக்கொள்ளும் முன் இறந்துபோவானாகில் அது நமக்கு எவ்வளவு வேதனையைத் தரும்?

தோல்வி ஏற்றுக்கொள்ள கடினமான ஒன்று. சிலவேளைகளில் நாம் தோல்வியடையும்போது நம் நெஞ்சிலும் தலையிலும் அடித்துக் கொள்கிறோம் அல்லவா?

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்த 10 பெரிய தவறுகளையும், அடைந்த தோல்விகளையும் பட்டியலிடச் சொன்னால், அவற்றில் முதலாவதாக எதைக் குறிப்பிடுவீர்கள்? உங்கள் பட்டியல் நிச்சயமாக என்னுடைய பட்டியலைவிட வித்தியாசமானதாகவே இருக்கும். நான் என்னுடைய பட்டியலில் எதை முதலாவதாகக் குறிப்பிட்டேன் என்று உங்களிடம் கூறமாட்டேன். ஆனால் ஒருவர் எதை முதலில் குறிப்பிடு வார் என்பது எனக்குத் தெரியும்.

அது 1929இன் புதுவருட நாள். ராய் ரீகல்ஸ் என்பவர் கால்பந்து வரலாற்றில் சாதனை படைத்த நாள். அதாவது அன்று அவர் தோல்வியடைந்தார். ரீகல்ஸ் கலிபோர்னியா பல்கலைக்கழகத்துக்காக விளையாடியபோது, ஒருமுறை ஒரு நல்ல நிலையில் விளையாடினார். எதிரணி வீரர் ஒருவர் துள்ளிக்குதித்து இவரைக் குறுக்கிட்டபோது, பந்து வேறு திசையில் சென்றுவிட்டது. அது மோசமான நிலை ஆயிற்று. அவர் தவறான எல்லையை நோக்கி ஓடினார். இதைக்கண்ட மற்ற வீரர்கள் உறைந்து நின்றுவிட்டனர். ரீகல்ஸ் தவறான பாதையில் ஓடுகிறார் என்பதை அவர்களால் நம்பவே முடியவில்லை. அவர்களால் தங்கள் கண்களை நம்பவும் முடியவில்லை. பின்னர் ரீகல்ஸின் குழுவைச் சேர்ந்த ஒருவர் அவர் பின்னே ஓடினார். அவர்

தாண்டக்கூடாத எல்லையைத் தாண்டி, எதிரணிக்குச் சாதகமான வெற்றிப் புள்ளி கிடைப்பதைத் தடுத்து, நண்பரைத் திசை திருப்ப முயன்றார். இப்படிப்பட்ட தவறை முன்னுரிமை கொடுத்து முதலில் எழுதுவீர்களா? ஒருவேளை நீங்கள் எழுதலாம். உங்கள் வாழ்க்கையில் நடந்த பெரிய தவறு எது?

இராபர்ட் ஃபிராஸ்ட் அமெரிக்காவின் பெரிய புலவர்களில் ஒருவர். எனினும் 20 வருடங்களாக அவர் எந்த பெயரும், புகழும் இல்லாமல் தவித்தார். 20 வருடங்களாக அவர் அடைந்தது தோல்வியே.

புகழ்பெற்ற இத்தாலியப் பாடகரான **என்ரிக்கோ கரூஸோவைத்** தெரியுமா? அவர் சிறு பையனாய் இருக்கும்போது சங்கீதம் பயின்றார். திடீரென்று அவரது குரல் மாறியது. அவருடைய ஆசிரியர் "உன் குரல் *சரியில்லை. நீ பாடுவதையும், பயிற்சி பெறுவதையும் நிறுத்திவிடு*" என்றார். ஆனால் அவர் தன் பயிற்சியை நிறுத்தவுமில்லை, பாடுவதை நிறுத்தவு மில்லை. பின்னர் அவர் புகழின் உச்சியை அடைந்தார்.

ஒரு பத்திரிக்கை ஆசிரியர், தனக்குக் கற்பனை சக்தி இல்லை என்று கூறியதற்காக ஒரு கார்ட்டூன் வரைபவரைத் துப்பாக்கியால் சுட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அந்தக் கார்ட்டூனிஸ்ட் தான் **வால்ட்டிஸ்னி.** பெரிய தவறுகளைச் செய்யும் மனிதர்களைப் பார்த்தீர்களா?

நீங்கள் செய்த பெரிய தவறுகள் எவை? உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்தித்த தோல்விகள் எவை? ஒருவேளை நீங்கள் செய்த பெரிய தவறு ஒரு தவறான மனிதனையோ, பெண்ணையோ திருமணம் செய்ததாக இருக்கலாம். நீங்கள் தேவனுடைய அழைப்பை உங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கலாம். கடந்த 20 அல்லது 30 வருடங்களாக இதுகுறித்து தேவனோடு போராடிக் கொண்டே இருக்கலாம். அது இன்னும் முடியவில்லை.

நீங்கள் உங்கள் குழந்தைகளைச் சரியாக வளர்க்கத் தவறியிருக்க லாம். அவர்கள் வழிதவறிக் கெட்டவர்களாய் அலைந்து கொண்டிருக் கிறார்கள். அவர்களை வளர்த்ததில் என்ன தவறு செய்தோம் என்று இப்பொழுது நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கலாம்.

நீங்கள் செய்துவரும் தொழிலில் தோல்வியும் நஷ்டமும் அடைந்தி ருக்கலாம். உங்கள் வாழ்க்கையில் ஒரு ஒழுக்கம் தவறிய செயல் நடந்திருக்கலாம். அதை மற்றவர்கள் அறியாவிட்டாலும், நீங்களும் சம்பந்தப்பட்ட நபரும் மட்டும் அறிந்திருக்கலாம்.

இவ்வாறு பலவிதமான சிந்தனைகளால் குழப்பமடையும்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? இவ்வாறு தோல்வியடைந்தவர்களாக காணப்படும்போது, நம்மைக் குறித்து உலகில் வேறு யாராவது கவலைப் படுவார்களா? சரி, இயேசுகிறிஸ்து உங்களுக்காகக் கவலைப்படுவாரா?

இயேசு பாவிகளின் மேல் கரிசனையுள்ளவராயிருக்கிறார் !

அப்போஸ்தலனாகிய பவுல் 1தீமோ.1:12,13 வசனங்களில் இப்படிக் கூறுகிறார்: **"கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென் றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் அவரை ஸ்தோத்திரிக் கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தி னாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்".**

நாம் பாவம் செய்யும்போதும் நம்மை நேசிக்கும் அளவுக்கு நம்மீது கரிசனை உள்ளவராயிருக்கிறார். நாம் பாவம் செய்த பிறகும் அவர் நம்மை நேசிக்கிறார். 1யோவான் 1:9 இல் **"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக் கிறார்"** என்று வாசிக்கிறோம்.

இவ்வாறு நீங்கள் வாழ்க்கையில் வீழ்ச்சியும், தோல்வியும் அடைந்த வர்களாயிருந்தாலும்கூட இயேசு உங்கள்மேல் கரிசனையுள்ளவரா யிருக்கிறார். சங்.86:5 இல் **"ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்"** என்று வாசிக்கிறோம். நீங்கள் தேவனின் மன்னிப்பைப் பெறவேண்டு மானால் செய்யவேண்டியதெல்லாம், உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பவேண்டும். செய்தது பாவம் என்று நீங்கள் அறிக்கையிட வேண்டும். ஆண்டவரிடம் வேண்டி மன்னிப்புக் கேட்க வேண்டும். நெகேமியா 9:17ஆம் வசனம் தேவனை இப்படி விளக்குகிறது: **"ஆண்டவரே, நீர் வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையும் உள்ளவருமான தேவனாகிய நீர் அவர்களைக் கைவிடவில்லை".**

அன்பான சகோதரனே, சகோதரியே தேவன் உங்களை நேசிக்கிறார். நீ பாவஞ்செய்து கெட்டுப் போனவர்களாயிருந்தாலும் வாழ்க்கையில் தோல்வியடைந்திருந்தாலும் அவர் உன்னைக் கைவிடுவதில்லை. உன் பாவமும் வீழ்ச்சியும் எவ்வளவு அதிகமாய் இருந்தாலும் அவ்வளவு

அதிகமாயும், ஆழமாயும் அவரது அன்பு உன்மேல் இருக்கும். உனது தேவைகளுக்கு தேவனுடைய அன்பு போதுமானது. நீ எவ்வளவு ஆழமான பாவக்குழியில் விழுந்திருக்கிறாயோ, அவ்வளவு ஆழத்துக்கு இயேசு உன்னைத் தூக்கி எடுப்பதற்காக இறங்கி வரவேண்டும்.

உங்களுடைய ஒழுக்கக்கேடுகளுக்காக அவர் துக்கப்படுகிறார்!

உங்களுடைய பாவம் ஒரு அறநெறி ஒழுக்கக்கேடா? பல தடவைகளில் அறநெறி ஒழுக்கக்கேடுகளை மிக மோசமான பாவம் என்று கருதுகிறோம். நீங்கள் ஒழுக்கக் கேடுள்ளவர்களாயிருந்தால் இயேசு உண்மையிலேயே உங்களுக்காகத் துக்கப்படுகிறாரா? ஆம், அவர் நிச்சயமாக உங்களுக்காகத் துக்கப்படுகிறார்.

ஐசுவரியமுள்ள வாலிபனுடைய சம்பவத்தை நினைத்துப் பாருங்கள். அவன் தன்னை ஒழுக்கமுள்ளவன், நீதியுள்ளவன் என்று நினைத்துக்கொண்டு இயேசுவிடம் வந்தான். அவன் "நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டான். அதற்கு இயேசு: "**விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார்" (மாற்கு 10:19).** அந்த பணக்கார வாலிபன் இன்னும் இயேசுவிடம், "**போதகரே, இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்" (வச.20).** இருந்தபோதிலும் அவன் ஒழுக்கத்தில் குறைவுபட்டவனாயிருந்தான். அவன் தன்னை நல்லவன் என்று எண்ணி பெருமைப்பட்டுக் கொண்டிருந்தான். எனவே அவன் தேவனுடைய பார்வையில் வீழ்ச்சியடைந்தவனாகக் காணப்பட்டான். அவனால் தன்னுடைய தேவையை உணர முடியவில்லை. இயேசுவிடம் வந்தவர்களில் ஒரு பெரிய பிரச்சனையுடன் வந்து, அதற்கு தீர்வு காணாமல் சந்தோஷமின்றி திரும்பிச்சென்றவன் இவன் மட்டுமே.

இந்த ஒழுக்கக் கேடுள்ளவன் மீது இயேசு கரிசனை கொண்டாரா? நிச்சயமாக அவர் அவன்மீது கவலைகொண்டார். இயேசு வீழ்ச்சியடைந்தவர்களையும் கண்ணோக்குகிறார். 21ஆம் வசனம் கூறுவதைப் பாருங்கள்: "**இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து:**" என்று வாசிக்கிறோம். நாம் பாவிகளாயிருந்தாலும், வாழ்க்கையில் வீழ்ச்சி அடைந்தவர்களாயிருந்தாலும், அவர் தொடர்ந்து நம்மை நேசிக்கும்

அளவிற்கு நம்மீது கரிசனை உள்ளவராயிருக்கிறார்.ஒரு பெரிய சோதனை வரும்போது நாம் அதை எதிர்த்து ஜெயிக்கத் தவறிவிட்டாலும், அவர் நம்மைத் தள்ளிவிடுவதில்லை. ஆனால் அவர் நம்மை நேசிக்கிறார். உண்மையாகவே அவர் நம்மை விசாரிக்கிறவராயிருக்கிறார்.

சரி, உங்களுடைய வாழ்க்கையில் ஒரு தவறு நேர்ந்துவிடுகிறது. அதனால் இயேசு உங்களை நேசிக்கவில்லை என்று பொருளல்ல. நீங்கள் செய்யவேண்டுமென்று அவர் எதிர்பார்ப்பதென்னவெனில், நீங்கள் செய்த தவறை உணர்ந்து அறிக்கை செய்யுங்கள். அந்தப் பாவத்தைச் செய்ததற்காக மனஸ்தாபப்பட்டு மன்னிப்பு கேளுங்கள்; மனந்திரும்புங்கள். உங்கள் தவறைச் சரிசெய்த பின்னர் முன்னேறிச் செல்லுங்கள். இயேசு உங்களை நேசிக்கிறார். நாம் வீழ்ச்சியடைந்தவர்களாயிருக்கும்போது இயேசு நமக்காக உண்மையில் விசாரிக்கிறவராயிருக்கிறாரா?

ஆம், அவர் உங்களை விசாரிக்கிறவர். நம்மை மன்னிக்கும் அளவுக்கு நம்மேல் கரிசனை உள்ளவராயிருக்கிறார் என்பதற்குரிய அத்தாட்சி எதுவென்றால், அவரிடத்தில் "ஆண்டவரே என்னை மன்னியும்" என்று நீங்கள் வேண்டினால் அவர் உங்களை மன்னிக்க முடியும்.

பாவங்களை மன்னிக்க யாரால் முடியும்?

நாம் தவறுவதற்குப் பல வழிகள் உண்டு. நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு தேவையானவைகளை வாங்கிக்கொடுக்கத் தவறியிருக்கலாம். நீங்கள் இந்தப்புத்தகத்தை ஏதோ ஒரு இடத்தில் அமர்ந்து வாசித்துக் கொண்டிருக்கலாம். ஏனெனில் உங்களுக்கு ஒரு வீடு இல்லை. வீடு என்று அழைப்பதற்கு உங்களுக்கு எந்த இடமும் இல்லை. எனவே நீங்கள் இருக்கும் இடமே உங்கள் வீடாகிவிட்டது. அல்லது உங்கள் பிரச்சனை உங்களுக்கு ஒரு வீடு இல்லை என்பதல்ல. உங்களுக்கு ஒரு வீடு இருக்கிறது; நீங்கள் அந்த வீட்டில் இல்லை. நீங்கள் வேறு யாருடனோ தங்கியிருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் மனைவியையும், குழந்தைகளையும் விட்டு பிரிந்து வந்துவிட்டீர்கள். நீங்கள் உங்கள் குடும்பத்தை அவமானத்துக்குள்ளாக்கி விட்டீர்கள். நீங்கள் வீட்டை நோக்கிப்பார்க்கும்போது உங்கள் வாழ்க்கையில் வீழ்ச்சி அடைந்தவர்களாகி விட்டீர்கள். உங்களைப் போன்ற வழி தவறியவர்களை மன்னிக்கும் வல்லமை யாருக்கு உண்டு?

மாற்கு 2:1-13இல் ஒரு அற்புதமான சம்பவம் விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு திமிர்வாதக்காரனை அவனுடைய நான்கு நண்பர்கள் தூக்கிக்

கொண்டு வந்து, கூட்டம் அதிகமாக இருந்தபடியால் வீட்டின் மேல் கூரையைப் பிரித்து அவனை உள்ளே, இயேசுவின் அருகே இறக்கினார்கள். இயேசு அவனுடைய விசுவாசத்தைக் கண்டு, "மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்றார்(வச.5). இதைக் கண்ட பரிசேயர்களும், சதுசேயர்களும் "**தேவனைத் தவிர பாவங்களை மன்னிக்க யாரால் முடியும்?**" என்று கேட்டார்கள் (வச.7). இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, "**பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்**" (வச.10,11).

முடிவாக, தேவன்தான் உங்களை மன்னிக்க முடியும். அவர் உங்களுடைய வாழ்க்கையில் உள்ள சீர்கேடுகளை நீக்கிப்போடுவார். உங்களுடைய பாவங்களுக்குரிய பிராயச்சித்தத்தைச் செலுத்த தேவன் தமது குமாரனைக் கல்வாரிக்கு அனுப்பினார். அந்தளவுக்கு அவர் உங்களை நேசிக்கிறார். அவர் உங்களிடத்தில் கரிசனையுள்ளவராக இராவிட்டால், நீங்கள் வாழ்க்கையில் வீழ்ச்சியடையும்போது, நீங்கள் எப்போதுமே மன்னிப்பைப் பெற முடியாதபடி உங்களைக் கைவிட்டிருப்பார். ஆனால் அவர் அப்படிச் செய்வதில்லை. அவர் உங்களை நேசிக்கிறார். அவர் உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிக்கிறார். ஏனெனில் அவர் உங்களுக்காக கவலைப்படுகிறார்.

மன்னிப்புக்கு எல்லை இல்லை !

இயேசுவைக் கல்வாரிச் சிலுவையில் அறைந்து கொன்றவர்கள்தான் மாபெரும் குற்றத்தைச் செய்தார்கள். அவர்கள் பாவம் செய்துகொண்டிருக்க, இயேசு அவர்களை மன்னித்துக்கொண்டே இருந்தார். இதைக் கவனித்திருக்கிறீர்களா? "**இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்**" (லூக்கா 23:34). வீழ்ச்சியைத் தொடர்ந்து மன்னிப்பு வருகிறது. உங்களுக்காகக் கவலைப்படும் ஒருவர் இருக்கும்போது இந்த மன்னிப்பும் கிடைக்கிறது.

நாம் வீழ்ச்சியடைந்து பாவங்களைச் செய்யும்போது இயேசு உண்மையிலேயே நம்மேல் கரிசனையுள்ளவராயிருக்கிறாரா? ஆம். அவர்களுக்காக பரிதபிக்கிறவராயிருக்கிறார். நம்முடைய எல்லாக் காரியங்களையும் மீண்டும் சரிசெய்ய அவர் நம்மேல் அக்கறையுள்ளவராயிருக்கிறார். பேதுருவைப் பாருங்கள். இயேசு பேதுருவிடம், 'சேவல்

கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்' (யோவா.13:38). அவர் கூறியது சரியாயிற்று. யோவான் 18ஆம் அதிகாரத்தில், காலையில் சேவல் கூவுகிறதற்கு முன்னே பேதுரு இயேசுவைத் தெரியாது, தான் அவரோடிருந்ததில்லை என்று மூன்று முறை மறுதலித்தான். இது ஒரு தோல்வி. பேதுரு ஒரு மாபெரும் தோல்வியைத் தழுவினான். அவன் சோதனையை எதிர்க்க முயற்சித் தான். அவனால் முடியவில்லை. அவன் வீழ்ச்சி அடைந்துவிட்டான்.

"சீமோன் பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள். ... பேதுரு வாசலருகே வெளியே நின்றான். அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்த மற்றச்சீஷன் வெளியே வந்து, வாசல்காக்கிறவள் களுடனே பேசி, பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டு போனான். அப்பொழுது வாசல்காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி: நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றாள். அவன்: நான் அல்ல என்றான்" (யோவா.18:15-17).

பேதுரு எவ்வளவு சீக்கிரமாய் "**அது நான் அல்ல**" என்று மறுதலிக்கிறான் பாருங்கள். "**சீமோன்பேதுரு நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தான். அப்பொழுது சிலர் அவனை நோக்கி: நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள். அவன்: நான் அல்ல என்று மறுதலித்தான்" (யோவா.18:25).**

மூன்றாவதாக, இன்னொருவன் பேதுருவிடம், "**நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே காணவில்லையா என்றான். அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவிற்று" (யோவா. 18:26,27).**

உண்மையில் பேதுரு ஒரு தூய்மையான பரிசுத்தவான் அல்ல. அவன் உங்களைப்போலவும், என்னைப் போலவும் ஒரு சாதாரண மனிதன்தான். அவனிடத்திலும் அடிக்கடி மாபெரும் மீறுதல்கள் காணப்பட்டன. அவன் இயேசுவிடம், 'ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் நானும் உம்முடனே வருவேன்; நான் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீரோ அதையெல்லாம் செய்வேன். நிச்சயமாக, உறுதியாக நான் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்றான். இப்படி நடக்க வாய்ப்பே இல்லை' என்றான். ஆனால் அது நடந்தது.

ஆம், இயேசு பேதுருவைத் தொடர்ந்து நேசித்தார். அவன் வீழ்ச்சி யடைந்தபோதும் அவனை நேசித்தார். இயேசு அவனைத் தூக்கி விட்டார். அவனைத் தூசு தட்டினார். அவனை மன்னித்தார். யோவான் 21 ஆம் அதிகாரத்தில் இயேசு பேதுருவிடம் பேசுவதைப் பாருங்கள். "**நீ**

என்னை நேசிக்கிறாயா?" என்று கேட்கிறார். பேதுரு இயேசுவை மூன்று தடவை மறுதலித்திருந்தான். அவன் மூன்றுமுறை **"இயேசுவை அறியேன்"** என்று கூறியிருந்தான். இப்பொழுது மூன்றுமுறை **"இயேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன்"** என்று கூறும் வாய்ப்பு அவனுக்குக் கொடுக்கப்படுகிறது.

ஆதித்திருச்சபையில் பேதுரு மிகப்பெரிய நற்செய்தியாளனாக ஆகிவிட்டான். இயேசு உயிர்த்தெழுந்த பின்னர் கிறிஸ்தவத்தின் ஆரம்பத்தில் பேதுருவே முக்கியமான பேச்சாளராய் இருந்தார் (அப்.2: 14-36, 3:12-26, 4:8-12). உங்களுக்கு இது ஆச்சரியமாயிருக்கிறதா! இயேசு தன்னை மறுதலித்த பேதுருவின்மேல் கரிசனை உள்ளவராயிருந்தார் என்பதை அறியும்போது நீங்கள் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

அவர் நம்மேல் கரிசனை உள்ளவராயிருப்பதற்கு விதிவிலக்குகள் ஏதாவது உண்டா? இயேசு அக்கறை காட்டாத மனிதர்கள் யாராவது உண்டா? இயேசு யாருக்காவது மன்னிப்பு அளிப்பதற்கு மறுப்பாரா?. 1கொரி.6:9,10 ஆகிய வசனங்கள் இப்படிக்கூறுகிறது: **"அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப் படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக் காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக் காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை".**

இது மிகவும் கொடுமை இல்லையா? இந்த வீழ்ச்சிகள் மிகவும் கொடியவையும், மோசமானவையும் ஆகும். இருந்தபோதிலும் 11ஆம் வசனம் இப்படிக் கூறுகிறது: **"உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந் தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப் பட்டீர்கள்.** இயேசு பாவிகளுக்காகக் கவலைப்படுகிறாரா? இப்படிப்பட்ட வர்களிடம் கேட்டுப்பாருங்கள். தூற்றுகிறவர்கள், சுயபுணர்ச்சிக்காரர் கள், விக்கிரகாராதனைக்காரர்கள், விபசாரக்காரர்கள், வேசிமார்க்கத்தார் ஆகியோரிடம் கேளுங்கள். தேவன் இந்தப் பாவங்களை மன்னிக்க மாட்டார் என்று அவர்கள் கூறுவார்கள்.. ஆனால் அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு வேண்டினால் தேவன் அவர்களை மன்னிப்பார். இப்படி மனந்திரும்புகிறவர்களை நியாயப்படுத்த தேவன் கரிசனை உள்ளவர். அவர்கள் ஒருபோதும் பாவம் செய்யாதவர்கள்

போல அவர்களை நடத்துவார். அவர் நம்மை இரட்சிக்கவும், நாம் நீதிமான்கள் என்பது போல நம்மை நடத்தவும் அவர் காத்திருக்கிறார்.

பாலியல் ஒழுக்கக் கேடுள்ளவர்களுக்காகவும் அவர் துக்கப்படுகிறார். இயேசு இவ்வாறான பாவங்களை வெறுக்கிறார். அதேவேளையில் அவர் பாவிகளிடத்தில் கரிசனையுள்ளவராயிருக்கிறார்.

உங்கள் காரியம் என்ன? சில கடினமான சோதனைகளை மேற்கொள்ள முயற்சித்தும் தோல்வி கண்டபோது இயேசு உங்களை விசாரிக்கிறவராக இருந்தாரா? நீங்கள் ஆழ்ந்த வேதனையில் இருக்கும் போது, எந்த விடுதலையும் கிடைக்காதபோது, இரவு நீங்கள் கண்ணீர் வடித்துக் கதறியபோது இயேசு உங்களுக்காகப் பரிதபித்தாரா? நீங்கள் ஆண்டவராகிய தேவனுக்கெதிராகப் பாவம் செய்யும்போதும், நீங்கள் சில பயங்கரப் பாவத்தில் விழும்போதும், சில ஆழமான சோதனைகளில் தடுமாறி விழும்போதும், உங்கள் போதகர் அதை அறியாமல் இருக்கலாம். உங்கள் குடும்பத்தினர் ஒருவேளை அறியாமல் இருக்கலாம். ஒருவேளை உங்களைத் தவிர வேறு எவருமே அறியாமலும் இருக்கலாம். ஆனால் இயேசு அதை அறிந்திருக்கிறார். நீங்கள் சோதனையில் அகப்படும்போது உங்களுக்காகக் கவலைப்படுகிறார்.

சோதனையைப் பற்றி நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். எர்வின் லாசர் என்பவர் சோதனையைக் குறித்து சரியாக விளக்கியிருக்கிறார்: "**சோதனை என்பது தேவனுடைய பெரிதும்படுத்தும் கண்ணாடி. அது இன்னும் தேவன் நம்மில் எவ்வளவு வேலைசெய்யவேண்டும் என்பதைக் காட்டும்**". சோதனை பாவமல்ல, சோதனையில் விழுவது தான் பாவமாகும். நாம் சோதனையில் விழுந்துவிடும்போது நாம் அவருடைய குமாரனைப்போலப் பரிசுத்தவானாக மாறுவதற்கு நம்மில் அவர் இன்னும் எவ்வளவு செயல்படவேண்டும் என்பதை நமக்குக் காட்டுகிறது. நீங்கள் சோதிக்கப்பட்டு தோல்வியடையும்போதும் தேவன் உங்களுக்காகக் கவலைப்படுகிறார்.

இந்த உலகத்தில் நீங்களும், நானும் தான் முதன்முதலில் பாவத்தில் விழுந்தவர்களல்ல. நாமும் கடைசி ஆளாக இருக்கப்போவதும் இல்லை.

மோசேக்கு முதல் வீழ்ச்சி ஒரு கொலை ; எலியாவுக்கு முதல் வீழ்ச்சி ஆழமான சோர்வு ; பேதுருவுக்கு முதல் வீழ்ச்சி இயேசுவை மறுதலித்தது; சிம்சோனின் வீழ்ச்சிக்குக் காரணம் மாம்ச இச்சை ; தோமாவுக்கு சந்தேகப்படுதல் அவனது வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது; வஞ்சித்தல் யாக்கோபுக்கு ஒரு பிரச்சனையாயிருந்தது.

நாம் எல்லாருமே இதைப்போன்றதொரு தோல்வியைச் சந்தித்துள்ளோம். இவர்கள் எல்லாருக்கும் நமக்கும் உள்ள பொதுவான தன்மை என்ன? அவர்கள் எல்லோரும் இழந்தவர்கள். தோல்வியடைந்தவர்கள். அவர்கள் தேவனை நேசித்திருந்தார்கள். தேவனும் அவர்களை நேசித்திருந்தார். இருந்தபோதிலும் அவர்கள் வீழ்ச்சியடைந்து விட்டார்கள். இவ்வாறான சோதனையிலாவது வீழ்ச்சியிலாவது நாமும் விழுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

நீங்கள் ஆண்டவருக்கு எதிராகச் செயல்பட்டிருந்தீர்களானால், நீங்கள் சோதனையில் விழுந்தீர்களானால், நீங்கள் ஒழுக்கக் கேடுள்ளவர்களானால், இயேசு அதிக ஆழமாக உங்களுக்காகக் கவலைப்படுகிறார். அவர் உங்களுக்கு உதவிசெய்ய விரும்புகிறார். அவர் உங்களுக்காக தமது ஜீவனைக் கொடுக்க வந்தவர்.

என் அருமை நண்பனே, அவர் உனக்கு மகிழ்ச்சியான வாழ்வைத் தர வந்தார். இதுவரை நீ பார்த்திராத அளவு ஒரு நல்ல வாழ்வை உனக்குத் தர விரும்புகிறார். அதைப் பெற்றுக்கொள்ள நீ செய்யவேண்டியதெல்லாம் அவரை உன் இரட்சகராக ஏற்றுக்கொள்வது மட்டுமே. நீ உன் பாவத்தை அறிக்கை செய்யவேண்டும். அவரது மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நீ செய்யவேண்டியதெல்லாம் அவருடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர் உன்னை ஒரு புதிய வழியில் நடத்த அவருக்கு இசைந்து கொடுக்கவேண்டும்.

நீங்கள் தோல்வியடைந்த ஒரு பாவியா? அல்லது நீங்கள் ஒரு விசுவாசியாக இருந்தபோதிலும் இன்று பாவத்தில் விழுந்துவிட்டீர்களா? நீங்கள் விரும்புகிறபடி ஆண்டவருக்காக வாழத் தவறிவிட்டீர்களா? நீங்கள் சோதனையை எதிர்த்து வெற்றி பெறத் தவறிவிட்டீர்களா?

நாம் எல்லோரும் பாவிகள், தோல்வியடைந்தவர்கள்தான். தோல்வியும் வீழ்ச்சியும் முடிவல்ல என்பதை நீங்கள் உணரவேண்டும். ஒரு தோல்வி ஒரு தற்காலிகப் பின்னடைவாக இருக்கலாம். இயேசு உங்களை நேசிக்கிறார். அவர் உங்களுக்காகக் கவலைப்படுகிறார். அவர் உங்களுக்காக மரிக்க வந்தார். நீயும் நானும் செய்த பாவம், தோல்வி, வீழ்ச்சி ஆகியவற்றுக்கான பிராயச்சித்தத்தைச் செலுத்த தம்முடைய உயிரைக் கொடுத்து வெற்றியடைந்தார்.

நீங்கள் ஒரு பாவியாயிருப்பதினால் உங்கள் வாழ்க்கை இத்துடன் முடிந்து போவதில்லை. சோதனையோடுள்ள போராட்டத்தில் தோல்வியடைந்த நீங்கள், இப்பொழுது இயேசு உங்கள்மேல் கரிசனை உள்ளவராயிருக்கிறார் என்பதை அறிந்து அதிசயமடைகிறீர்களா? அவர் உண்மையிலேயே உங்களை விசாரிக்கிறவராயிருக்கிறார். ஆண்டவரிடம் நீங்கள் ஒப்புரவாக விரும்புவீர்களானால் அதை ஏன் இப்போதே செய்யக்கூடாது? நீங்கள் எந்த சோதனையில் விழுந்தீர்கள் என்பதை ஆண்டவரிடம் தெரிவியுங்கள். அது ஒரு பாவம் என்று அவரிடம் சொல்லுங்கள். உங்கள் பாவத்தை அவரிடத்தில் அறிக்கையிடுங்கள். உங்களை மன்னிக்கும்படி ஆண்டவரிடம் வேண்டுங்கள். உங்கள் எல்லாப் பாவங்களையும் மன்னிப்பதற்கு அவர் தயை உள்ளவராயிருக்கிறார். அவர் உங்கள் பாவங்களை மன்னித்துச் சுத்திகரிக்க ஆயத்தமாயிருக்கிறார்.

நீங்கள் பாவம் செய்து இயேசுவிடம் உங்களை மன்னிக்க வேண்டுவீர்களானால், அவர் என்ன செய்வார் என்று உங்களுக்குத் தெரியுமா? கரிசனையும் அன்பும் உள்ள எவரும் செய்யக்கூடியதையே அவர் செய்வார். அவர் உங்களை மன்னிப்பார். உங்கள் மனஸ்தாபம் உண்மையாயிருந்தால் உங்களுக்கு மன்னிப்பு கிடைக்கும். நீங்கள் உண்மையுடன் மனந்திரும்பினால் அவர் உங்களை உயர்த்துவார். அவர் உங்களைத் தூக்கியெடுத்து, தூசியைத் தட்டுவதுபோல் உங்கள் பாவக் கறைகளைச் சுத்தப்படுத்தி, உங்களை மறுபடியும் தமது ஊழியத்தில் பயன்படுத்துவார்.

ஏனெனில் இயேசு உங்களுக்காகப் பரிதபிக்கிறவர். அவர் உங்களுக்காக ஆழ்ந்து கவலைப்படுகிறார். நீங்கள் பாவத்தில் வீழ்ந்தபோதும், சோதனையில் வீழ்ந்தபோதும் இயேசு உங்களுக்காகக் கரிசனையுடன் கவலைப்பட்டுக் கொண்டே இருக்கிறார்.

அத்தியாயம்-5

நான் துக்கப்படும்போது இயேசு என்னை விசாரிக்கிறவராயிருக்கிறாரா?

இந்த உலகில் எனக்கு மிகவும் பிரியமான ஒருவருக்கு நான் பிரியாவிடை கொடுத்து அனுப்பும்போது, எனது உள்ளத்தின் வேதனை இயேசுவைத் தொடுகிறதா? எனது வேதனையை உணருகிறாரா? அவர் எனது வேதனையிலும் துக்கத்திலும் என்னோடு பங்குகொள்கிறாரா?

துக்கமடைந்திருக்கும் எனது இருதயம் நொறுங்கும் அளவுக்கு வேதனைப் படும்போது, அது ஆண்டவருக்குப் பிரியமாய் இருக்கிறதா? அப்பொழுது அவர் என்னைப் பார்க்கிறாரா?

1990 ஆகஸ்ட் மாதத்தில் "**வேதாகமத்திற்குத் திரும்புக**" என்னும் ஊழியத்தில் நான் பணியாற்ற ஆரம்பித்தேன். சரியாக இரண்டு மாதங் களுக்குப்பின் திருமதி.தியோடர் எப் அம்மையார் பரம இளைப்பாறு தலுக்குள் பிரவேசித்தார். அவருடைய அடக்க ஆராதனையை நான் நடத்தினேன். அவருடைய ஆசீர்வாதமான முன்மாதிரி வாழ்க்கையை உயர்த்திக் காட்டி, ஆண்டவராகிய இயேசுவுக்கு மகிமையை செலுத்தி னேன். **வேதாகமத்திற்குத் திரும்புக** ஊழியர்களாகிய எங்கள் அனைவருக்கும் அது மிகவும் அதிர்ச்சி தரும் நிகழ்ச்சியாக அன்றையதினம் இருந்தது. அந்த அம்மையாருடைய கணவர் தியோடர் எப் அவர்கள் வேதாகமத்திற்குத் திரும்புக என்னும் ஊழியத்தை ஸ்தாபித்தவர். இவர் 5 வருடங்களுக்குமுன் கர்த்தருக்குள் நித்திரை யடைந்திருந்தார். இவ்வாறான இழப்பின்போதெல்லாம் "இயேசு நம்மேல் கரிசனையுள்ளவராயிருக்கிறாரா?" என்னும் கேள்வியை மிக சுலபமாகக் கேட்டு விடுவோம்.

நாம் மிகுந்த மனவேதனை அடையும்போது, அது என் ஆண்டவரைத் தொடுகிறதா? அல்லது அவர் ஒரு மத்தியஸ்தராக மாத்திரம் இருந்து இடையில் தலையிடுபவரா? அவர் பரலோகத்தில்

பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்பதை நாம் அறிவோம். அவர் நமக்காக பரிந்து பேசுகிறவர். நமது வருங்கால ராஜா. அவர் தமது பணியைச் செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாம் அறிவோம். அவர் தமது கடமையை மட்டும் செய்துகொண்டிருக்கிறாரா? அல்லது நம்மீது கரிசனை கொண்டு நமக்காக செயல்பட்டுக் கொண்டிருக்கிறாரா?

1997ஆம் வருடத்தில் முதல் 6 மாத காலத்திற்குள் எனக்கு அருமையான 6 நண்பர்கள் புற்றுநோயினாலோ அல்லது முதுமையினாலோ இறந்துவிட்டதாகச் செய்தி வந்தது. அவர்கள் தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தை முடித்து, மறுமைக்குள் பிரவேசித்து விட்டனர். இந்த நண்பர்கள் அனைவரும் மிகவும் அன்பானவர்களும், உண்மையுள்ளவர்களும், ஜெபவீரர்களுமாய் இருந்தவர்கள். **வேதாகமத்திற்குத் திரும்புக** ஊழியத்திலே விசுவாசப்பங்காளர்களாகவும் ஜெபபங்காளர்களாகவும் இருந்து தாங்கியவர்கள். அவர்கள் எங்கள் ஊழியத்திற்கு உதாரத்துவமாக பண உதவியும் செய்திருந்தார்கள். நாங்கள் அவர்களை இழந்தபோது அதிகமாக வேதனையடைந்தோம்.

இருந்தபோதிலும் இப்படிப்பட்ட செய்திகளை சந்தோஷமும், துக்கமும் கலந்த முகத்துடன் நான் ஏற்றுக்கொள்கிறேன். சந்தோஷம் அடைவது எதற்கென்றால், கடந்துசென்ற என் அன்பர்கள் இப்பொழுது ஆண்டவரிடம் சேர்ந்துவிட்டார்கள். துக்கமடைந்தது எதற்கென்றால், அவர்களுடைய குடும்பத்தினர் அவர்களை இழந்தபோது மிகுந்த கவலைக்குள் ஆழ்ந்திருந்தார்கள். உங்கள் வாழ்க்கையிலும் சமீபத்தில் உங்களுக்குப் பிரியமான யாரையாவது நீங்கள் இழந்திருக்கலாம். அது உங்கள் தகப்பனோ, தாயோ, கணவரோ, மனைவியோ அல்லது ஒரு சிறு பிள்ளையாகவோ இருக்கலாம். இத்தகைய சூழ்நிலையில் உண்மையாகவே இயேசு நமக்காகப் பரிதவிக்கிறாரா? நம்முடைய உள்ளத்தின் வேதனை அவரைத் தொடுகிறதா? அவர் நம்முடைய வேதனையை உணருகிறாரா? நம்முடைய வேதனையிலும் துக்கத்திலும் நம்மோடு பங்குகொள்கிறாரா?

இந்த கேள்விகளுக்கெல்லாம் விடை ஆம்! என்பதுதான். இயேசு உங்கள் துக்கத்தின் வேளையில் உங்களை விசாரிக்கிறார். அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருந்து நமக்காக வேண்டுதல் செய்கிறவர் மட்டுமல்ல, அவர் நம்மை விசாரிக்கவும் செய்கிறார். இயேசு உண்மையான தேவன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவன்

என்ற நிலையில் இயேசுவுக்கு தெய்வீக உணர்வுகள் அத்தனையும் உண்டு. அதாவது அவர் ஒரு இயந்திர மனிதன் அல்ல. மனிதர்களுடைய கவலைகளைக் குறித்துக் கரிசனையற்றவர் அல்ல. அவர் நமக்காகக் கவலைப்படும் மனதுருக்கமும் இரக்கமும் உள்ள தேவன். அவர் உங்கள் துக்கங்களுக்காக கவலைப்படுகிறவர். உங்கள் வேதனைகள், துக்கங்கள் அனைத்தையும் அறிந்தவர், அவர் அதில் பங்கெடுத்தவர்.

இதை நான் எப்படி அறியமுடியும்? இயேசு எனக்காகக் கவலைப் படுகிறார் என்பதை இரண்டு காரணங்களால் நான் அறிவேன். முதலாவது என்னுடைய வாழ்வில் அவருடைய அன்பான கரிசனையை அனுபவித்து உணர்ந்திருக்கிறேன். அவர் எனக்காகக் கவலைப்படு கிறவர். இரண்டாவதாக இயேசு என்னை விசாரிக்கிறவர் என்று வேதாகமம் கூறுகிறது. இது சரிதானா என்பதை ஆராய்ச்சி செய்வோம்.

இயேசு நமது உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் ஒரு உணர்வுள்ள தெய்வம்!

சங்கீதம் 86:15இல் வேதம் நமக்கு தேவனின் தன்மைகளை நினை வூட்டுகிறது. "**ஆனாலும், ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்**" **(சங்.86:15).** இந்த வசனம் தேவனுடைய தன்மையைக் காட்டுகிறது. இது பிதாவின் தன்மை மட்டுமல்ல, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவனின் தன்மையும் ஆகும். திரியேக தேவனில் பங்கேற்கும் மூவருக்கும் நிறைவான மனதுருக்கமும், இரக்கமும் உண்டு. ஒவ்வொருவரும் கிருபை மிகுந்தவர்கள். ஒவ்வொருவரும் நீடிய பொறுமையும் இரக்கமும் உண்மையும் உள்ளவர்கள். தேவனுடைய ஆளத்துவத்தை ஒருவரும் பங்குபோட்டு பிரிக்கமுடியாது. பிதாவாகிய தேவனுடைய தன்மை எதுவோ அதுவே குமாரன், பரிசுத்த ஆவி ஆகியோருடைய தன்மையுமாய் இருக்கிறது.

தேவனுடைய உணரும் தன்மை சங்கீதம் 145:8,9இல் வலியுறுத்தப் பட்டுள்ளது. "**கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது**".

நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும்போது அவர் நம்முடைய வாழ்வில் ஏற்படும் சுக துக்கங்களை உணருகிறவர் என்பதைக் கண்டு கொள்ளாமல் இருக்கமுடியாது. அவர் தூரத்தில் இருந்து கொண்டு நமது

வாழ்வில் ஏற்படும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பவர் அல்ல. தேவன் என்ற நிலையில் இயேசு நம்மை நேசிக்கிறார். நமது வாழ்க்கையில் ஆழ்ந்த ஈடுபாடு உள்ளவராய் இருக்கிறார். நம்மை விசாரிப்பவர் என்பதற்கு வேதாகமம் தரும் சாட்சி இதுவே. அவர் நம்மை நேசிக்கிறார் என்பதை நாம் அறிகிறோம். ஏனென்றால் நாம் அவருடைய அன்பை உணர்ந்திருக்கிறோம். மேலும் வேதாகமமும் அவ்வாறு கூறுகிறது. சிறு பிள்ளைகளாக இருந்தபோது நாம் படித்த ஒரு பல்லவி இப்பொழுது பொருத்தமாக ஞாபகத்திற்கு வரலாம்.

"Jesus Loves Me. This I Know
For the Bible Tells me so"

"இயேசு என்னை நேசிக்கிறார் என்பதை நான் அறிவேன்;
என்னுடைய வேதாகமும் அப்படி கூறுகிறது"

குமாரனாகிய தேவன் என்னை நேசிக்கிறார். அவர் உண்மையாக என்னை நேசிக்கிறார். இயேசுவே தேவன். தேவன் என்னை விசாரிக்கிறவர்.

ஆனால் இயேசு மனிதர்களுடைய உணர்வுகள் அனைத்தையும் பெற்றிருக்கிறார். அதேவேளையில் தெய்வீக உணர்வுகளையும் முழு அளவில் பெற்றிருக்கிறார். அவர் உண்மையான தேவனும். உண்மையான மனிதனுமாக இருக்கிறார். அதாவது அவர் எந்திர மனிதனாகிய தேவன் அல்ல. அவர் ஒரு இயந்திர மனிதனும் (ROBOT) அல்ல. அவர் கவலைப்படாத ஒரு தேவனும் அல்ல. அவர் கவலைப்படாத ஒரு மனிதனும் அல்ல. அவர் மிகவும் அன்பும், உணர்வும் மனதுருக்கமும் கொண்ட ஒரு தெய்வீக மனிதன்.

மத்தேயு 9:35,36 ஆகிய வசனங்கள் இவ்வாறு கூறுகின்றன: "பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார். அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, ..." இந்த வசனங்களை வாசிக்கும்போது இயேசு உன்மேல் கரிசனையற்றவர் என்று தோன்றுகிறதா?

மத்தேயு 14:13,14 வசனங்களை ஒருபோதும் மறவாதேயுங்கள். **"இயேசு அதைக் கேட்டு, அவ்விடம் விட்டு, படவில் ஏறி, வனாந்தரமான ஓர் இடத்துக்குத் தனியே போனார். ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு, பட்டணங்களி லிருந்து கால்நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள். இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயி ருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்".** இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது இயேசு நம்முடைய துயரங்களையும், துக்கங்களையும் உணராதவரா? இவைகள் எல்லாம் மனதுருக்கமும், இரக்கமும் இல்லாத ஒரு மனிதர் செய்யும் செயல் அல்ல. இயேசு நமக்காகக் கவலைப் படுகிறார். அவர் உண்மையிலேயே கவலைப்படுகிறார்.

ஒரு குஷ்டரோகி இயேசுவிடம் வந்து முழங்கால்படியிட்டு, **"உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்..."** (மாற்கு 1:40) என்று கூறியதை நினைவிற் கொள்ளுங்கள். அவன் கூறியதைக் கேட்ட இயேசு, அவன்மீது மனதுருக்கமும் இரக்கமும் கொண்டு மனதுருகி தமது கையை நீட்டி அவனைத் தொட்டு, **"எனக்குச் சித்த முண்டு, சுத்தமாகு என்றார்"** (மாற்கு 1:41). இப்பொழுது சொல்லுங்கள். இயேசு உங்கள்மேல் கரிசனையுள்ளவராயிருக்கிறாரா? நீங்கள் பரலோ கத்திற்குச் செல்லும்போது இந்த குணமடைந்த குஷ்டரோகியிடம் கேளுங்கள்.

என் காரியம் என்ன?

இப்பொழுது நீங்கள் இப்படி நினைத்துக் கொண்டிருப்பீர்கள். "அது சரி, இயேசு மனதுருக்கமும் இரக்கமும் உள்ளவராய் இருந்தார். அவர் மிகுந்த அன்புள்ளவர். பிணியாளிகளைக் குணமாக்கினார். குருடர் களுக்குப் பார்வையளித்தார். அதற்கும் இன்றைய என்னுடைய வாழ்வுக்கும் தொடர்பு உண்டா? என்னுடைய வாழ்க்கையில் அவர் தம்முடைய மனதுருக்கத்தைச் செயல்படுத்திக் காட்டினாரா?

இது ஒரு நல்ல கேள்வி. வேதாகமத்தில் இதற்கு நல்ல விடை உள்ளது. இயேசு உங்களுக்காக துன்பப்பட்டார் என்று வேதாகமம் வெளிப்படுத்துகிறது. அவர் உங்களுக்காக இரத்தம் சிந்தினார். அவர் உங்களுக்காக மரித்தார். அவருக்கு உங்கள்மீது மனதுருக்கம் உண்டு. நீங்கள் இவற்றை விசுவாசித்து இவ்வுலகில் நீங்கள் மரிக்கும்போது பரலோகத்திற்கு செல்லவேண்டும் என்பதற்காகவே அவர் இவற்றை யெல்லாம் செய்தார்.

எபேசியர் 5:2 நமக்கு நினைவூட்டுகிறது என்னவென்றால், கிறிஸ்து நம்மை நேசித்ததினால் தம்மை அதற்காக கொடுத்தார். அவர் தம்மையே காணிக்கையான தியாகபலியாக தேவனுக்கு அர்ப்பணித்தார். உனக்காக இயேசு செய்தது அதுவே. இதன்மூலம் அவருக்கு உன்மேல் இருக்கும் மனதுருக்கத்தைக் காட்டுகிறார். அவர் உன்னை நேசிப்பதால் தன்னையே உனக்காக அர்ப்பணித்தார்.

வேதாகமத்தின் கடைசி புத்தகத்தில் யோவான் இயேசுவை உண்மையுள்ள சாட்சி என்றும், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த முதற்பேறுமானவர் என்றும், பூமியின் இராஜாக்களுக்கும் தலைவரானவர் என்றும் நம்மை நேசித்து நமது பாவங்களை தம்முடைய சொந்த இரத்தத்தினால் கழுவி சுத்திகரித்தார் என்றும் வெளிப்படுத்துகிறார்(வெளி.1:5). அவர்தான் இயேசு! உலக அரசாங் கத்தின் எந்த அதிகாரியினாலும் செய்யக்கூடாத அளவுக்கு உனக்காகப் பரிதபிக்கிறார். உன் குடும்பத்தைச் சேர்ந்த வேறு எந்த உறவினரும் உன்னை நேசிப்பதைவிட அதிகமாக நேசித்தவர் இயேசு. உன்னுடைய திருச்சபையில் உள்ள எவரும் உன்னை நேசிப்பதைவிட அதிகமாக நேசிப்பவர் இயேசு. இயேசு உண்மையிலேயே உங்களை விசாரிக்கிறவர்!

இயேசுவும் எனது துக்கங்களும்

இயேசு நமக்காக தமது உயிரைக் கொடுக்கும் அளவுக்கு நம்மை நேசித்தார். ஆனால் நமக்கு மிகவும் அருமையானவர்கள் இறந்து போகும்போது நமக்கு ஆறுதல் அளிக்கும் அளவுக்கு அவர் நம்மை நேசிக்கிறாரா? இந்த உலகத்தில் உங்களுக்கு மிகவும் அன்பானவர் களை இழந்து தவிக்கும்போது அவர் உங்களுக்காக பரிதபிக்கிறாரா? உங்கள் வாழ்வில் மிக நீண்ட நாள் நண்பராய் இருந்தவர் இறந்து விட்டால் நீங்கள் தாங்கமுடியாத துயரத்தில் தவிக்கும்போது அவர் உங்களுக்கு ஆறுதல் அளிக்கிறாரா? உங்கள் அப்பா, அம்மா, கணவன், மனைவி, மகன் அல்லது மகள் அல்லது உங்களது நெருங்கிய நண்பர் இறந்துவிடும்போது உங்கள் நிலை என்ன? இயேசு உங்களுக்காகக் கவலைப்படுகிறாரா?

இதை நாம் எப்படி அறியமுடியும்? இதை வேதத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். லூக்கா 7ஆம் அதிகாரத்தில் உள்ளத்தை உருக்கக்கூடிய ஒரு சோகமான சம்பவம் வருகிறது. ஒரு பெண்ணுக்கு ஒரே நேரத்தில்

இரண்டு இழப்புக்கள் ஏற்பட்டன. முதலில் அவளால் நேசிக்கப்பட்ட அவளது கணவன் இறந்துவிட்டான். எனவே அவள் இப்பொழுது ஒரு விதவையானாள். அதன்பின் இதுவரை அவளை நேசித்து அவளுக்காகக் கவலைப்பட்டு அவளுடன் வாழ்ந்துவந்த ஒரு குமாரன் இருந்தான். ஆனால் பரிதாபகரமாக அவனும் இறந்துவிட்டான். அவனை அடக்கம் செய்வதற்காக அவனுடைய உறவினர்கள் அவனது சரீரத்தைத் தூக்கிக்கொண்டு நகரத்திற்கு வெளியே நடந்து வரும்போது அந்தக் கூட்டத்தினர் இயேசுவைச் சந்தித்தார்கள்.

லூக்கா இதை இவ்வாறு குறிப்பிடுகிறார். **"மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்; அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனேகூடப் போனார்கள். அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டு வந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம் பெண்ணாயிருந்தாள்; ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள். கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத் தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்" (லூக்கா 7:11-15).**

இந்த நிகழ்ச்சியில் இயேசுவின் கரிசனையுள்ள இருதயத்தைக் கவனித்தீர்கள் அல்லவா? இயேசுவின் இருதயத்தில் அற்புதமான இரக்கமும், மனவுருக்கமும் நிறைந்துள்ளது. இந்த விதவையின் வேதனையையும் துக்கத்தையும் கண்டு, அவர் மனதுருகி அவளுடைய வேதனையை நீக்கி மகனை உயிருடன் எழுப்பி அவளிடம் ஒப்படைத்தார். இயேசு விதவையைக் கண்டபோது அவள்மீது அவருக்கு மனதுருக்கம் ஏற்பட்டது. இந்த உலகில் எனக்கு மிகவும் பிரியமான ஒருவருக்கு நான் பிரியாவிடை கொடுத்து அனுப்பும்போது இயேசு எனக்காகப் பாரப்படுகிறாரா? துக்கமடைந்திருக்கும் என் இருதயம் நொறுங்கும் அளவுக்கு வேதனைப்படும்போது அது ஆண்டவருக்குப் பிரியமாய் இருக்கிறதா? அப்போது அவர் என்னைப் பார்க்கிறாரா?

நல்லது, உங்களுக்கு எந்த சந்தேகமும் இருக்கக்கூடாது. உங்கள் கேள்விகளுக்குரிய பதில் இந்த வசனங்களில் உள்ளன. இவற்றில் உங்களுக்கு எந்த சந்தேகமும் இருந்தால் நீங்கள் பரலோகத்திற்குச் செல்லும்போது நாயீன் ஊர் விதவையிடமே கேளுங்கள். தனக்குப்

பிரியமானவரை இழக்கக்கொடுத்த வேதனை எப்படி இருக்கும் என்பதை அவள் நன்கறிந்திருந்தாள். அதேவேளையில் இயேசு எவ்வளவு வேதனையடைந்தார் என்பதையும் கண்டறிந்தாள்.

உங்கள் இழப்பை அவர் புரிந்துகொள்கிறார்

இயேசுவின் உலக வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்ட இழப்பு, துக்கம் இவற்றைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? இயேசுவின் மிகவும் பிரியமான நண்பனாகிய லாசரு இறந்துபோனான். அப்பொழுது இயேசு தூர இடத்தில் இருந்தார். அப்பொழுது மார்த்தாளுக்கும் மரியாளுக்கும் சகோதரனான, இயேசுவுக்குப் பிரியமான சிநேகிதனான லாசரு இறந்து விட்டான் என்னும் செய்தி இயேசுவுக்கு வந்துசேர்ந்தது. இவர்களுடைய உறவை யோவான் இப்படிக் குறிப்பிடுகிறார்: **"இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்" (யோவான் 11:5).**

பெத்தானியாவுக்கு செல்லும் வழியில் இயேசு வந்தபோது மார்த்தாள் அவரிடம் வந்து அவருடைய காலடியில் விழுந்து, **"ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்"** (யோவான் 11:21) என்றாள். அந்த சூழ்நிலையில் நாம் இருந்தோமானால் நாமும் இப்படித்தான் கூறியிருப்போம். இதுபோன்ற சம்பவங்கள் நம்முடைய வாழ்க்கையில் நடக்கும்போது, நமக்கன்பான யாருக்காவது மரணம் நேரிடும்போது "இது ஆண்டவருடைய குற்றம்" என்று நினைப்பதுண்டு.

"அவள் அழுகிறதையும் அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து" என்று 33ஆம் வசனத்தில் பார்க்கிறோம்.

பல விஷயங்களில் மார்த்தாள், மரியாள் ஆகிய இருவரும் இயேசுவிடம் ஆத்திரம் கொண்டு சாடினார்கள். அவர்களுடைய சகோதரனாகிய லாசரு, அவர்களிடமிருந்து ஏன் பிரிக்கப்பட்டான் என்று கேட்டார்கள். அவர்களுடைய உறவினர்களும் நண்பர்களும்கூட அங்கே வந்து கூடி லாசரு இறந்ததற்காக அழுது துக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சகோதரிகள், உறவினர்கள் ஆகிய அனைவரது துயரத்தையும் இயேசு கண்டபோது அவர் தமது ஆவியில் கலங்கி, துயரமடைந்தார்.

உங்களைப் புரிந்துகொள்ளாத யாரோ ஒருவர் செய்வதுபோல் இது தோன்றவில்லையா? இந்த உலகில் உங்களுக்கு மிகவும் அன்பான ஒருவரை நீங்கள் இழந்தபோது அதற்காகக் கவலைப்படாத ஒருவர் செய்வதுபோல் இது தோன்றுகிறதா? நான் அப்படி நினைக்கவில்லை. உண்மையில் வேதாகமத்திலேயே மிகச் சிறிய வசனமாகிய யோவான் 11:35 இயேசு துயரத்தை எவ்வாறு சந்தித்தார் என்பதைக் காட்டுகிறது. **"Jesus Wept" - "இயேசு கண்ணீர் விட்டார்" (யோவான் 11:35).** அதன்பின்னர் யூதர்கள் இயேசு அந்தக் குடும்பத்திற்காக எவ்வளவு கவலைப்பட்டார் என்பதை உணர்ந்துகொண்டார்கள். **"அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்" (யோவான் 11:36).**

நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கட்டுமா? இயேசு மார்த்தாளுக்கும் மரியாளுக்கும் லாசருவுக்கும் கரிசனையாயிருந்தது போல உங்களிடத்திலும் இருக்கிறார் என்று விசுவாசிக்கிறீர்களா? தாம் முன்பு ஒருபோதும் சந்தித்திராத நாயீன் ஊர் விதவையின் மேலும், அவளுடைய குமாரனின்மேலும் இயேசு மனதுருக்கமடைந்ததுபோல, உங்கள் மேலும் மனதுருக்கமுள்ளவராயிருக்கிறார் என்று விசுவாசிக்கிறீர்களா? இயேசு உங்களை நேசிக்கிறார். மற்ற ஒவ்வொருவருக்காகக் கவலைப்படுவதுபோல உங்களுக்காகவும் கவலைப்படுகிறார். இவர் அப்படிப்பட்ட மனதுருக்கமுள்ள தேவனாயிருக்கிறார்.

இயேசுவும் எனது வேதனையும்

பாடலாசிரியர் டானியேல் விற்றில் என்பவர் கீழ்கண்டவாறு தனது பாடலில் விளக்கியுள்ளார்:

இயேசு உடன் இல்லாத ஒரு சோதனையும் எனக்கு ஏற்பட்டதில்லை. அவர் சுமக்காத எந்தப் பாரமும் எனக்கு ஏற்பட்டதில்லை. அவர் பகிர்ந்து கொள்ளாத எந்தத் துக்கமும் எனக்கு ஏற்பட்டதில்லை. ஒவ்வொரு கணமும் நான் அவரது கரிசனையான பராமரிப்பில் இருக்கிறேன். இருதய வேதனையோ துக்கமோ துன்பமோ துயரமோ கண்ணீரோ வேதனைக் குரலோ ஆபத்துக்களோ எனக்கு ஏற்பட்டபோதிலும் சிங்காசனத்தில் வீற்றிருப்பவர் தமக்குச் சொந்தமானவர்கள் அனுபவிக்கும் துக்கங்களுக் காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

உங்களுக்கு மிகவும் அன்பான ஒருவரின் மரணத்தை நினைத்து நீங்கள் துக்கப்பட்டு கொண்டிருக்கலாம். அந்த நிகழ்ச்சி நடந்து ஒரு வாரமோ, ஒரு மாதமோ, ஒரு வருடமோ அல்லது 5 வருடங்களோ

ஆகியிருக்கலாம். அந்த வேதனை உங்களைவிட்டு நீங்காமல் இருக்கிறதா? நீங்கள்மட்டும் இதற்காக கவலைப்படுகிறதில்லை என்பதை அறிய வேண்டுமென நான் விரும்புகிறேன். உங்களுடன் சேர்ந்து இயேசுவும் வருந்துகிறார். உங்களோடு சேர்ந்து வருந்துவதன் மூலம் அவர் உங்களை ஆறுதல்படுத்த விரும்புகிறார். அவர் நம்முடைய மகா பிரதான ஆசாரியன். நமது பெலவீன உணர்ச்சிகளைக் கண்டு அவர் வேதனைப்படுகிறார். அதாவது இன்று நீங்கள் என்ன உணர்கிறீர்களோ அதையே அவரும் உணர்கிறார். நீங்கள் காயமடையும்போது அவரும் காயமடைகிறார். நீங்கள் வேதனைப்படும்போது அவரும் வேதனைப்படுகிறார். அவர் உங்களை நேசிக்கிறார். உங்கள்மீது மனதுருக்கமும் இரக்கமும் கொள்ளுகிறார். நீங்கள் எதன்வழியாகக் கடந்து செல்கிறீர்கள் என்பதை அவர் அறிவார். அதேமாதிரியான பாடுகளையும் துன்பங்களையும் அவர் கடந்து சென்றிருக்கிறார். உங்களுடைய துக்கம் மற்றவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் இயேசு அதை அறிவார். இயேசு உங்களுக்காகக் கவலைப்படுகிறார்.

அந்த கடைசி அந்தகாரமான மணிநேரத்தை நீங்கள் தனிமையாகச் சந்திக்க வேண்டியதில்லை. உங்களுக்காக இயேசு அங்கே நிற்கிறார். உங்கள் பாடுகளை இயேசு உணருகிறார். அவர் உங்களுக்காக ஜெபிக்கிறார். அவர் உங்களுக்கு ஆறுதல் அளிக்கிறார். அவர் அதைச் செய்யட்டும். இன்றே உங்களுடைய இருதயத்தை அவரிடத்தில் ஊற்றிவிடுங்கள். உங்களுடைய பாரத்தை அவர் சுமக்கட்டும்.

அவர் நம்மை விசாரிக்கிறவரானபடியால் நமக்கு கிடைக்கும் ஆறுதல்

"பாவ சஞ்சலத்தை நீக்க	சால துக்க துன்பத்தாலே
பிராண நண்பர்தான் உண்டே	நெஞ்சம் நொந்து சோருங்கால்,
பாவ பாரம் தீர்ந்துபோக	துன்பம் இன்பமாக மாறும்
மீட்பர் பாதம் தஞ்சமே;	ஊக்கமான ஜெபத்தால்"

நாம் பலநேரங்களில் இப்பாடலைப் பாடுகிறோம். இந்தப் பாடலின் வரிகள் மிகவும் கருத்தாழம் உள்ளவை. இயேசு உங்கள்மேல் கரிசனையுள்ளவராயிருக்கிறாரா? நீங்கள் எந்த சூழ்நிலையில் கடந்து செல்கிறீர்கள் என்பதை அவர் அறிவாரா? அவர் உங்களை இன்று தமது கைகளில் ஏந்திக்கொள்ள நீங்கள் அனுமதிப்பீர்களா? இயேசு நம் மீது எந்தளவிற்கு கரிசனை உள்ளவராயிருக்கிறார் என்பதை விளக்கும் ஒரு

சம்பவத்தை நான் வாசித்திருக்கிறேன். அது எரிக் பார்க்கரைப் பற்றியதாகும்.

எரிக் பார்க்கர் கிரேட் பிரிட்டனிலிருந்து வந்த ஒரு மிஷனரி. அவர் 50 ஆண்டுகளாக போர்த்துகீசிய நாட்டில் ஆண்டவருக்காக மிக சுறுசுறுப்பாக ஊழியம் செய்துகொண்டிருந்தார். பலதடவைகளில் எதிர்ப்புக்கள் மத்தியிலும் அவர் ஊழியம் செய்ய வேண்டியதிருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது போர்த்துகீசிய நாட்டில் சூழ்நிலை மிகவும் நெருக்கடியாயிற்று. அப்பொழுது பாதுகாப்புக்காக தன் மனைவியையும் எட்டுக் குழந்தைகளையும் கிரேட் பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கும்படி பலர் எரிக்கிடம் ஆலோசனைக் கூறினர். எனவே அவர் அவர்களைக் கப்பலில் ஏற்றினார். அவரது சகோதரியும் அவருடைய 3 குழந்தைகளும் ஏற்கனவே அதே கப்பலில் ஏறியிருந்தனர். அவருக்கு நெருங்கிய உறவினர்களான அனைவரையும் கப்பலில் வழி அனுப்பிவைத்தபின் அடுத்த ஞாயிற்றுக்கிழமை போதகராகிய பார்க்கர் தம்முடைய சபையினரின் முன்னே நின்று இவ்வாறு அறிவித்தார்: "என்னுடைய குடும்பமும், உறவினர்களும் பத்திரமாக வீடுபோய் சேர்ந்துவிட்டார்கள்"என்று. பின்னர் பார்க்கர் ஆராதனையைத் தொடர்ந்தார்.

சபைமக்கள் அவர் கூறிய செய்தியின் உண்மையான கருத்தைப் பின்னர்தான் அறிய வந்தனர். ஆராதனை தொடங்குவதற்குமுன் போதகரிடம் ஒரு தந்திச்செய்தி வந்திருந்தது. அதில் இவரது குடும்பத்தினர் சென்ற கப்பல் ஒரு நீர்மூழ்கிக் கப்பலினால் தாக்கப்பட்டு, கப்பல் சேதமடைந்து அதில் பயணம் செய்த அனைவரும் கடலில் மூழ்கிவிட்டார்கள் என்றிருந்தது.

அவரது மனைவியும் அவரது எட்டு பிள்ளைகளும், அவருடைய சகோதரியும் அவருடைய 3 பிள்ளைகளும் விசுவாசிகளாய் இருந்தார் கள். எனவே அவர்களைப் பொறுத்தவரையில் கிரேட் பிரிட்டனின் கரையை அடைவதைவிட சிறந்ததான பரலோக வீட்டிற்குப் போய் சேர்ந்துவிட்டார்கள் என்று நினைத்து எரிக் ஆறுதலடைந்தார்.

செய்தியைக் கேட்ட போதகர், குடும்பத்தைப் பிரிந்த வேதனை யினால் உள்ளம் பொங்கியபோதும் அவர் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஆராதனையை நடத்திமுடித்தார்.

இதோ ஓர் அடிக்குறிப்பு: இயேசு உங்களுக்காக மரித்தார். உங்கள் பாவத்திற்குச் செலுத்தவேண்டிய பிராயச்சித்தத்தை அவர் செலுத்தித் தீர்த்தார். அவரைவிட அதிகமாக வேறு எவரும் உங்களுக்காக கவலைப்பட முடியாது. மேலும்மேலும் இயேசு தாம் உங்கள்மேல் கரிசனை உள்ளவராக இருப்பதை வலியுறுத்தியுள்ளார்.

உங்களுக்குப் பிரியமான ஒருவரை இழந்தபின் நீங்கள் தனிமையில் வேதனைப்படும்போது, இயேசு உங்களுக்காக பரிதபிக்கிறாரா? இவ்வாறான இயேசு உங்களை விசாரிக்கிறவராயிருக்கிறார் என்று அறிந்து நீங்கள் முன்னேறிச் செல்லமுடியுமா? ஆம், உங்களால் முடியும். உங்களை விட்டுப் பிரிந்தவர்கள் இந்த உலகில் உங்களோடு இருக்க ஒருபோதும் வரமாட்டார்கள் என்று அறிந்துகொள்ளுங்கள்; அதேவேளையில் நீங்கள் தனியாகத் துன்பம் அனுபவிக்கவில்லை; இயேசுவும் உங்களோடுகூட இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

இயேசு எப்போதும் உங்களுடனேயே இருக்கிறார்!

அவர் எப்போதும் உங்களுக்கு உதவி செய்வார்!!

ஆம், அவர் உங்களை விசாரிக்கிறார்!!

முடிவுரை

ஆம்! இயேசு உங்களை விசாரிக்கிறார்!

ஓ! ஆமாம். அவர் என்னை விசாரிக்கிறவர் என்பதை நான் அறிவேன். என்னுடைய வேதனை அவருடைய இருதயத்தைத் தொட்டுவிட்டது.

நாட்கள் துக்கத்தில் நிறைந்திருக்கும்போது, இரவுகள் வெறுமையும், வேதனையும் நிறைந்திருக்கையில் என்னுடைய இரட்சகர் எனக்காகப் பரிதபிக்கிறார் என்று அறிவேன்.

நான் சிறுவனாயிருந்தபோது பாடிய பல பாடல்களை நான் நேசிக்கிறேன். அவற்றில் பல பாடல்கள் இப்போது பாடப்படுவதில்லை. அவற்றில் ஒன்று ஃப்ராங்க் கிரேயப் எழுதிய "இயேசு நம்மை விசாரிக்கிறாரா?" என்னும் பாடலாகும். இப்பாடலின் கருத்து எப்போதும் உண்மையானது, பொருத்தமானது. "இயேசு நம்மை விசாரிக்கிறவர்".

அப்படியானால் போதகர் ஃப்ராங்க் கிரேயப்புக்கு என்ன ஆனது! அவர் தொடர்ந்து ஊழியம் செய்துவந்தார். பிலதெல்பியா வட்டாரத்தில் அவர் "சூரியப்பிரகாசப் போதகர்" என்று அழைக்கப்பட்டார். இவரது நண்பர் C.ஆஸ்டின் மைல்ஸ் இவரைக் குறித்துப் பின்னால் இப்படிக் குறிப்பிட்டார்:

"ஃப்ராங் கிரேயப் ஒரு சிறந்த போதகர், ஊழியர், ஆவிக்குரிய மனிதர். எல்லாம் நன்மைக்கே என்னும் கருத்துடையவர். குழந்தைகளால், சிறுவர்களால் அதிகம் நேசிக்கப்பட்டவர். அவர் எப்போதும் வெள்ளை உடையில் சூரியஒளியைப் போன்று பிரகாசிப்பார். அவருடைய தோற்றம் பிள்ளைகளை மட்டுமல்ல, அவரோடு தொடர்பு கொள்ளும் அனைவரையும் கவரும்.

அவரிடம் பரிசுத்தமான ஒரு காந்த சக்தி உண்டு. அவரிடம் குழந்தைகளுடையதைப்போன்ற களங்கமற்ற விசுவாசம் இருந்தது." சோகம் நிறைந்த ஆழங்களிலிருந்தும், துன்பத்திலிருந்தும், சூரியப் பிரகாசம் போன்ற விசுவாசத்துக்கும், சந்தோஷத்துக்கும் போதகர்

ஃப்ராங்க் அவர்களை அழைத்துவந்தது அவரது பாடலில் அமைந்த ஒரு எளிய, ஆனால் மாபெரும் கருத்தாகும். அது என்னவென்றால், "என்னுடைய இரட்சகர் என்மேல் கரிசனையுள்ளவர் என்பதை நான் அறிவேன்" என்பதாகும்.

உங்கள் பாரங்கள் உங்களை அழுத்தும்போதும், உங்கள் கவலைகள் உங்களுக்கு வேதனையளிக்கும்போதும் இயேசு உங்களை விசாரிக்கிற வராக இருக்கிறாரா? ஓ! ஆமாம். அவர் உங்களை விசாரிக்கிறவர்!

உங்களுடைய வழிகள் இருளடைந்து, அதன்வழியாக காரண மில்லாத ஏதோ ஒரு பீதியினால் நீங்கள் பயப்படும்போது இயேசு உங்களுக்காகக் கவலைப்படுகிறாரா? ஆம். அவர் உங்களுக்காகக் கவலைப்படுகிறார்.

நீங்கள் சோதனையை எதிர்த்து வெற்றிகொள்ளத் தவறிப் பாவத்தில் விழுந்துவிடும்போது இயேசு உங்கள்மேல் கரிசனை உள்ளவராயிருக்கிறாரா? ஓ! ஆமாம். அவர் உங்கள்மேல் கரிசனையுள்ளவர்!

உங்களுக்கு மிகவும் பிரியமான ஒருவர் உங்களைவிட்டுப் பிரிந்து பரம இளைப்பாறுதலுக்குச் சென்றதினால் நீங்கள் தாங்கமுடியாத வேதனையை அனுபவிக்கும்போது, இயேசு உங்களுக்காகக் கவலைப்படுகிறாரா? உங்கள் வேதனை அவருடைய இருதயத்தைத் தொட்டுவிட்டது.

பகல்வேளைகள் வேதனையால் நீளும்போதும், இரவு வேளைகள் சோகத்தால், தூக்கமின்றிக் கண்ணீர் இரவுகளாக மாறும்போதும், என்னுடைய இரட்சகர் எனக்காகப் பரிதபிக்கிறார் என்று அறிவேன்.

உலகில் மனித வாழ்க்கை என்பது ஒரு மலர்ப்படுக்கை அல்ல. நமக்கு ஏற்படும் பாரங்களும், கவலைகளும் சுமக்கமுடியாதபடி பாரமாயிருக்கலாம். ஒவ்வொரு திசையிலிருந்தும் சோதனைகள் உங்களை வீழ்த்த முயற்சிக்கலாம். உங்கள் இருதயத்தில் பயமும், திகிலும் பிடிக்கலாம். அதனால் உங்கள் அமைதியும், சந்தோஷமும் விலகிப்போகும். இருந்தபோதிலும் ஒரு கணமும் இயேசு உங்களுக் காகக் கவலைப்படாமல் இருப்பதில்லை. உங்களுடைய வாழ்க்கையில் சோகமும், இருளும் நிறைந்த நாட்களில், எல்லாரைக் காட்டிலும் உங்களுக்கு மிகவும் பிரியமான ஒருவரை இழந்து தவிக்கும் வேளை யிலும், இயேசு உங்கள் நிலையை அறிந்து, உங்களுக்காக அவர்

வேதனைப்படுகிறார். அவர் உங்களுக்கு ஆறுதல் அளிக்க முடியும்.

அவர் உங்கள்பேரில் அக்கறைகொள்ளவும், உங்கள் தேவைகளை யெல்லாம் சந்திக்கவும், அவரை நம்புங்கள். உங்களுக்கு ஏற்படும் சோதனைகளாலும், துன்பங்களாலும் அவர் தொடப்படாதவரல்ல. அவருடைய பரிபூரண மீட்புத் திட்டப்படி அவர் உங்களை அந்தகார இருளிலிருந்து வெளிப்படுத்தி, அவருடைய சமுகத்தினுடைய பிரகாசத்துக்குள் கொண்டுவருவார். "**உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்**" என்று எதற்காக 1 பேதுரு 5:7 நமக்கு ஆலோசனை அளிக்கிறது என்று தெரியுமா? அவர் உங்களை விசாரிக்கிறவராக இருக்கிறபடியால்!

ஆம், இயேசு உங்களையும், என்னையும், நம் அனைவரையும் எப்போதும் விசாரிக்கிறவராயிருக்கிறார்.

Leading People Into A Dynamic Relationship with God

Through

- **Radio**
- **Television**
- **Internet**
- **Music**
- **Literature**
- **BCC**
- **Counseling**
- **Convention**
- **SMS Ministry**

"Brethern, pray for us"
(1 Thes.5:25)

ஆம்,
இயேசு உங்களை
விசாரிக்கிறார்!

நீங்கள் எப்பொழுதாவது கைவிடப்பட்டதாக உணர்ந்தது உண்டா? உங்கள் பிரச்சனைகளைத் தனியே சந்திக்கும்படி நீங்கள் தனியாக விடப்பட்டதாக நீங்கள் எப்பொழுதாவது வேதனை அடைந்ததுண்டா?

நமது இருதயம் நொறுங்கும்படியாக வேதனைகளிலும், சோகங்களிலும் நெருக்கப்படும்போதும், நாமும் இதே கேள்விகளைக் கேட்டுப் போராடுகிறோம். 1 பேதுரு 5:7ஆம் வசனம் இக்கேள்விக்குப் பதிலாக அமைகிறது:

"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்".

நமது வேதனையான வேளையில் இவ்வசனம் நமக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது. ஆம்! நாம் ஆராதிக்கும் தெய்வம் நம்மை விசாரிக்கிறவராக இருக்கிறார். இயேசு கிறிஸ்து நம்மீது மனதுருக்கமும் இரக்கமும் உள்ளவராக இருக்கிறார். இது எவ்வளவு பெரிய உண்மை!

அருமையானவர்களே, இயேசு உங்களை நேசிக்கிறார். அவர் உண்மையாகவே உங்களை நேசிக்கிறார். இந்தப் புத்தகத்தில் உட்ரோ குரோல் விவரிப்பதுபோல, நீங்கள் உங்கள் பாரங்களை ஒருபோதும் தனியாகச் சுமக்க வேண்டியதில்லை. ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தை உங்கள் வாழ்க்கையில் உரிமை பாராட்டி சுதந்தரித்துக் கொள்ளுங்கள். ஆம், இயேசு உங்களை விசாரிக்கிறார்.

அறிவர் உட்ரோ குரோல் "வேதாகமத்திற்கு திரும்புக" (Back To The Bible) பன்னாட்டு ஊழியத்தின் தலைவரும், வேதாகம ஆசிரியரும் ஆவார்.

சத்தியவசனம்
21, (9) வெங்கட்ராமன் ரோடு, சின்ன சொக்கிகுளம்
த.பெ.எண் 55, மதுரை - 625 002, போன்: 0452-2532316
E-mail: <svmadurai@yahoo.co.in> <info@sathiyavasanam.in>
website: www.sathiyavasanam.in